விலை: 30.00
viber : 076 636 3378
பக்கங்கள் : பதினாறு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk


கலயாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 01 வியாழக்கிழமை (16.12.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 362

வவுனியா நெடுங்கேணியில்

## பெண் ஒருவர் சுட்டுக்கொலை

(வவுனியா)
வவுனியா நெடுங்கேணி பகுதியில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி சூட்டுச் சம்பவத்தில் பெண் ஒருவர் சம்பவ இடத்திலே பலியாகி 15

## நயினாதீவு கடற் பகுதியில் சடலம் மீட்பு

(நயினாதீவு)
நயினாதீவு பகுதியில், கடலில் மூழ்கி ஒருவர் உயிரிழந்துள்ள நிலையில், நயினாதீவு - 15

## வவுனிக்குளத்தில் நீரில் மூழ்கிய இளைஞன் பலி



வள்ளத்தில் மீன் பிடித்தபோது சம்பவம்

(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு மாந்தை கிழக்கு வவுனிக்குளத்தில் வள்ளத்தில் மீன்பிடி 15

# யாழ்.மாநகர சபையின் பட்ஜெட் நிறைவேறியது

ஆதரவாக 24 : எதிராக 21 வாக்குகள்



(யாழ்ப்பாணம்) யாழ்ப்பாணம் மாநகர சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் 3 மேலதிக வாக்குகளால் நிறைவேறியுள்ளது. குறித்த வரவு செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 24 வாக்குகளும் எதிராக 21 வாக்குகளும் கிடைத்தன.

கூட்டமைப்பின் 16 உறுப்பினர்களும் எதிராக வாக்களித்ததுடன் ஈபிடிபியின் 10 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர். (15ஆம் பக்கம் பார்க்க)

வடமராட்சி கடற்கரையில்

## மேலும் ஒரு சடலம் கரையொதுங்கியது

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் வடமராட்சி கடற்கரை பகுதியில் உருக்குலைந்த நிலையில் மேலும் ஒரு சடலம் நேற்று கரையொதுங்கியுள்ளது.

வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தொண்டைமானாறு - சின்னமலை பகுதி கடற்கரையில் உருக்குலைந்த நிலையில் சடலம் ஒன்று கரையொதுங்கியது.

இதேவேளை, கடந்த சில வாரத்திற்கு 15

## யாழ்.மாநகர பட்ஜெட் கூட்டமைப்பு எதிர்ப்பு

(யாழ்ப்பாணம்)
கடும் எதிர்ப்பார்ப்புகளுக்கு மத்தியில் யாழ்.மாநகர சபையின் பட்ஜெட் வெற்றி பெற்றது.

நேற்று யாழ்.மாநகர சபையின் வரவு செலவுத் திட்டம் சபையில் சமர்ப்பிக்கப்பட்டபோது தமிழ்த் தேசிய கூட்ட மைப்பின் 16 உறுப்பினர்களும் எதிர்த்து வாக்களித்தனர். 15

## யாழுடன் நல்லுறவை பேண விரும்புகிறோம்

சீனத் தூதுவர் யாழில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)
எதிர்வரும் காலங்களில் யாழ்ப்பாணத்திற்கும் சீனாவிற்கும் இடையில் தொடர்புகளைப் பேண விரும்புகின்றோம் எனச் சீன நாட்டின் தூதுவர் கீ சென் ஹொங் தெரிவித்தார். 15

யாழ்.பொது நூலகத்தில்

## ‘இந்தியன் சென்ரர்’ பகுதியை பார்வையிட்ட சீனத் தூதுவர்

(யாழ்ப்பாணம்)
இலங்கைக்கான சீன தூதுவர் கீ சென்ஹொங் தலைமையில் தூதரக அதிகாரிகள் குழு நேற்றைய தினம் புதன்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள நிலையில், யாழ்.பொது நூலகத்திற்கு விஜயம் மேற்கொண்டு இருந்தது. 15

சீனாவாலும் இந்தியாவாலும்

# தமிழ் சமூகத்துக்கு அனுகூலம் கிடைக்கும்

தமிழர் தாயகத்தில் சீனத் தூதுவர்

(யாழ்ப்பாணம்)
சீனாவாலும் இந்தியாவாலும் தமிழ்ச் சமூகத்துக்கு அனுகூலங்கள் கிடைக்கும் என இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென் ஹொங் தெரிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)



கொரோனா

## 16 பேர் பலி

(கொழும்பு)
இலங்கையில் ஆண்கள் 11 பேர் உட்பட மேலும் 16 பேர் கொரோனாவுக்கு 15

## ‘ஒமிக்ரோன்’ திரிபு வேகமாக உலகம் முழுவதும் பரவுகின்றது

உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை

(ஜெனிவா)
புதிய கொரோனா வைரஸ் மாறுபாடு ‘ஒமிக்ரோன்’ முன்னெப்போதும் இல்லாத அளவில் உலகம் முழுவதும் பரவி வருவதாக உலக சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது.

77 நாடுகளில் பெரிதும் மாற்றமடைந்த 15

ஆனைக்கோட்டையிலும்


## எரிவாயு அடுப்பு வெடித்து சிதறியது

(அராலி)
மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆனைக்கோட்டை - உயரப்புலம் பகுதியில் வசிக்கும், நல்லூர் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்



தோற்றம் 03 - 01 - 1949

மறைவு 15 - 12 - 2021

## இராசரெட்ணம் மாட்டின் மரியதாஸ்

நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசரெட்ணம் மாட்டின் மரியதாஸ் அவர்கள் நேற்று (15.12.2021) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராசரெட்ணம் - அந்தோனியாப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கந்தையா - மரியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் ஞானசீலி அவர்களின் பாசமிகு கணவரும் மாலினி (ஆசிரியை - யா/ கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தி.), காலஞ்சென்ற ஜோதினி மற்றும் சுரேசினி, மனோராஜ், மனோதரன் (யாழ். அஞ்சல் உதவியாளர்), நிரோஜினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் வவிக்குமார், டிமோசன், அருட்செல்வி, மேரிறீட்டா ஆகியோரின் அன்பு மாமனாரும் மேரிஷன், வினுஷன், அபிஷா, டிஷாறா, டிலானி, மதுஷாந், ஆயிஷன், மதுஷிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை இன்று (16.12.2021) வியாழக்கிழமை நாவாந்துறை புனித நீக்கிலார் ஆலயத்தில் பிற்பகல் 4.00 மணியளவில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நாவாந்துறை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (9092)

இல. 18/3, லெப்பை லேன்,
நாவாந்துறை, யாழ்ப்பாணம்.

தகவல் :-
குடும்பத்தினர்

# பரமேஸ்வராச் சந்தியில் இளைஞன் மீது வாள்வெட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பரமேஸ்வரா சந்திப் பகுதியில் இளைஞன் ஒருவரை கும்பல் ஒன்று நேற்று காலை 10.30 மணியளவில் துரத்தி துரத்தி வாளினால் வெட்டியுள்ளது.

யாழ். நகர் பகுதியை நோக்கி குறித்த இளைஞன் தனது மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்தபோது. இரண்டு மோட்டார் சைக்கிள்களில் பின்தொடர்ந்த நால்வர் இளைஞனை பரமேஸ்வரா சந்தியில் வழிமறித்து கடுமையான வாள்வெட்டினை மேற்கொண்டனர்.

கும்பலின் தாக்குதலில் இருந்து தப்பித்து. பல்கலைகழகப் பக்கமாக இளைஞன் தப்பியோடிய போதும், துரத்தி துரத்தி வாளினால் வெட்டப்பட்டுள்ளார். (ம-18,33)

# அஞ்சலி செலுத்துகின்றோம்



நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலின்
மரபுவழி அறங்காவலரும்
சப்ரகமுவ பல்கலைக்கழக ஓய்வுநிலை
மொழித்துறைப் பேராசிரியருமான

அமரர்

கலாநிதி **கனகசபாபதி நாகேஸ்வரன்**

அவர்களின் மறைவிற்கு
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா
நயினையுறை நாகபூஷணியாளின்
திருவடிகளைச் சென்றடையப்
பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

(C-3266)

பிரிவால் துயருறும் - அறங்காவலர் சபையினர்
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் - நயினாதீவு

# மரண அறிவித்தல்

## குகநேசன் சாரங்கன்



மண்ணில் 20.05.2003 விண்ணில் 15.12.2021

கனடா, மொன்றியலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குகநேசன் சாரங்கன் அவர்கள் நேற்று (15.12.2021) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் குகநேசன் - வனிதா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் தாரகா, ராதிகா, மகோத்கரன், பார்க்கவி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற கணேசன், குணரட்ணம், குகவதி மற்றும் மகேஸ்வரி ஆகியோரின் அன்புப் பேரனும் சைவசிகாமணி (ஓய்வுநிலை எழுதுவினைஞர்), சைவ இறைமணி (ஓய்வுநிலை ஆசிரியர்), சைவக்கலைஞன் (அமரர்), சிவகுமாரன் (தாதிய உத்தியோகத்தர்), திருமாலழகன் (ஆசிரியர் - வலம்புரி), அனுரா (கனடா), கௌசல்யா (ஆசிரியை), வியாசர்மணி, ஜீவதா (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மருமகனும் குணசீலன் (ஜேர்மனி), மிகுந்தலால், லக்ஸ்மணசிறி (பொறியியலாளர்), யசோதை (தாதிய உத்தியோகத்தர்), ரமணன் (கமநலசேவைகள் நிலையம்) ஆகியோரின் அன்புப் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கனடாவில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (19.12.2021) அன்று நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

துன்னாலை மத்தி,
கரவெட்டி.

இ

தகவல்:
குடும்பத்தினர்

# மூன்றாம் ஆண்டு நீங்காத நினைவலைகள்



பிறப்பு 1982.06.20

இறப்பு 2018.12.16

## அமரர் லோகதாசன் விஜிதசங்கர்

[ கணனி ஆசிரியர், NC TEC நிறுவன உரிமையாளர் ]

ஆண்டுகள் மூன்று ஆனாலும்
ஆறவில்லை உன் நினைவுகள்
ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
மகனே என்றழைக்க நீ இவ்
உலகில் இல்லையே

(9044)

இல. 34, முத்துமாரி அம்மன் வீதி,
செல்வாநகர், கிளிநொச்சி.

தகவல்
லோகதாசன் குடும்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13+ வேண்டும் என்பது பிரிவினைக்கான வழி

## பிரிவினையை விதைக்கும் ஞானசார தேரர்

(கொழும்பு)

**அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்திற்கு அமைய அதிகாரப் பகிர்வை சிறுபான்மை கட்சிகள் கோரினாலும் அவ்வாறான அதிகாரப்பகிர்வு முன்னெடுக்கப்படும் பட்சத்தில் நாடு மீண்டும் பிரிவினை வாதத்திற்கு தள்ளப்படும் என "ஒரே நாடு ஒரே சட்டம்" தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவர் கலகொட அத்தே ஞானசார தேரர் எச்சரிக்கையை விடுத்துள்ளார்.**



சிங்கள நாளிதழ் ஒன்றுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறுபான்மையினரைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கூறி அரசியலுக்கு வந்த சிறுபான்மைக் கட்சிகளின் தலைவர்கள் இனங்களை ஒன்றிணைப்பதற்குப் பதிலாக இனங்களைப் பிளவுபடுத்தும் வகையில் செயற்பட்டதாகவும் எனவே 13 கோரிக்கை அல்லது 13 பிளஸ் கோரிக்கையை தற்சமயம் முன்வைக்க வேண்டாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

"தற்போது, "ஒரு நாடு ஒரே சட்டம்" செயலணியில் உள்ள நாங்கள் அனைத்து வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களையும் உள்ளடக்கியுள்ளோம். நாங்கள் வடக்கின் சில பகுதிகளுக்குச் செல்லும் போது மத்திய அரசினதோ அல்லது எங்கள் அரசியலமைப்புச் சட்டமோ அமுல்படுத்தப்படவில்லை. அவர்கள் எமக்கு எல்லா உதாரணங்களையும் வழங்கினர்.

உதாரணத்திற்கு காத்தான்குடியில் ஒரு சபை உள்ளது. அவர்கள் காத்தான்குடியை அந்த சபையால் ஆளுகிறார்கள். அரசாங்க சட்டம் அங்கு இல்லை. அவ்வாறான செயற்பாடு பாதிப்பை ஏற்படுத்துகிறது.

வடக்கு, கிழக்கு மற்றும் ஏனைய பிரதேசங்களுக்குச் செல்லும் போது பொலிஸ் அதிகாரங்கள் இன்றி, இன்று நாட்டின் பிரதான சட்டத்தை அமுல்படுத்தாமல், காணி அதிகாரங்களினால் உருவாக்கப்பட்டுள்ள பிரச்சினைகளைக் காண முடிகிறது.

எனவே 13 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் அதிகாரப் பகிர்வு அமுல்படுத்தப்படுவதன் ஊடாக நாடு மீண்டும் பிரிவினைவாதத்திற்கு தள்ளப்படும் என அவர் தெரிவித்தார். (நி)

## சீனத் தூதுவர் யாழ்.விஜயம்



(குப்பிழான்)

இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென்ஹொங் தலைமையில் தூதரக அதிகாரிகள் குழு நேற்றுப் புதன்கிழமை யாழ்.மாவட்டத்துக்கு விஜயம் மேற்கொண்டனர்.

பருத்தித்துறை முனைப் பகுதியைப் பார்வையிட்ட மேற்படி குழுவினர் நேற்றுப் பிற்பகல் வடக்கு ஆளுநர் ஜீவன் தியாகராஜா, யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன், யாழ். மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் உள்ளிட்டோரைத் தனித்தனியாகச் சந்தித்து கலந்துரையாடினர்.

இதேவேளை, இன்று வியாழக்கிழமை யாழ்.மாவட்ட மீனவர்களுக்கு உதவித்திட்டங்கள் வழங்கல் உள்ளிட்ட நிகழ்வுகளிலும் அவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இரண்டு நாட்கள் பயணமாக குறித்த குழுவினர் வடக்குக்கு விஜயம் மேற்கொண்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (4-5-18-33-60)

## ஓய்வுபெறுவோரை சேவையில் இணைக்க அனுமதி

(கொழும்பு)

ஓய்வு பெறுவோரின் வயதெல்லை 65 வரையில் அதிகரிக்கும் வரவு-செலவுத்திட்ட முன்மொழிவு, பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நாள் தொடக்கம் எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி வரையான காலப்பகுதிக்குள் ஓய்வுபெற்ற அல்லது ஓய்வுபெறுவதற்கு உள்ள அதிகாரிகளை மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்ள வேண்டுமாயின் அதற்காக நிறுவக பிரதானியின் அனுமதி கட்டாயமாகுமென அரச சேவை அமைச்சின் செயலாளர் ஜெ.ஜெ.இரத்தினசிறி தெரிவித்தார்.

இது தொடர்பான முன்மொழிவு ஜனவரி முதலாம் திகதியாக இருந்த போதிலும் முன்மொழிவு முன்வைக்கப்பட்ட நவம்பர் மாதம் 12 ஆம் திகதி தொடக்கம் ஓய்வுபெற்ற அல்லது ஓய்வுபெறவுள்ள அதிகாரிகள் தொடர்பில் நிவாரணம் வழங்கப்படுமாயின் உரிய நடைமுறை தயாரிக்கப்பட வேண்டும் என்று ஓய்வூதிய திணைக்களம் அந்த அமைச்சுக்கு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த செயலாளர் தற்போதைய நிலைமைக்கு மத்தியில் இந்த அதிகாரிகளை சேவையில் நியமிப்பதா? இல்லையா? என்பது தொடர்பாக எந்தத் தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் தெரிவித்தார். (நி-5)

## தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் விபத்து 4 வயது மகளும் தந்தையும் பலி

### மூவர் காயம்

(கொழும்பு)

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் ஏற்பட்ட விபத்தில் காரில் பயணித்த 4 வயது மகளும் தந்தையும் பலியாகியுள்ள நிலையில் மேலும் மூவர் காயமடைந்துள்ளனர்.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் மில்லனிய பிரதேசத்தில் கார் ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

விபத்துக்குள்ளான காரில் பயணித்த தந்தை (வயது-39), மகள் (வயது-4) இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த விபத்தில் மேலும் மூவர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (நி-5)



பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் தையிட்டி கலைமகள் சனசமூக நிலையத்திற்கு கடந்த 13 ஆம் திகதி தளபாடங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் சிவஸ்ரீ தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினரின் இணைப்புச் செயலாளர் பா.கஜதீபன் கலந்து கொண்டு சனசமூக நிலைய நிர்வாகத்தினரிடம் [illegible]

(படம் -கஜிந்தன்)

## மத்திய தபால் பரிமாற்றகத்தில் 5 இலட்சம் கடிதங்கள் தேக்கம்

(கொழும்பு)

தபால் ஊழியர்களின் அடையாளப் பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக மத்திய தபால் பரிமாற்றகத்தில் சுமார் 5 இலட்சம் கடிதங்கள் தேங்கியுள்ளன.

ஊழியர்கள் கடமைக்கு திரும்பியவுடன், கடிதங்களை விநியோகிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படும் என பிரதி தபால்மா அதிபர் ராஜித்த ரணசிங்க குறிப்பிட்டுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை மாலை 4 மணி முதல் நேற்று முன்தினம் நள்ளிரவு வரை தபால் நிலைய ஊழியர்கள் அடையாளப் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

ஆட்சேர்ப்பு நடவடிக்கை உள்ளிட்ட 24 கோரிக்கைகளை முன்வைத்து தபால் ஊழியர்களால் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாக ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்கத்தின் இணை ஏற்பாட்டாளர் சிந்தக பண்டார தெரிவித்துள்ளார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




கிளிநொச்சி மாவட்ட மக்களின் வாழ்வாதாரத்தை
உயர்த்துவதில் இடையறாது பங்களிப்பாற்றிவரும்

## கிளிநொச்சி மாவட்ட செயலகம்

2020ம் ஆண்டிற்கான
சிறந்த சேவை வழங்கும் அரச அலுவலகங்களின்
தேசிய உற்பத்தித்திறன் தேர்வில்
இரண்டாவது தடவையாக
முதலாம்
இடத்தை பெற்றமைக்காக
மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்

**தலைவர்,**
**பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், பணியாளர்கள்**
**கரைச்சி தெற்கு ப.நோ.கூ. சங்கம் (வ/து),**
**கிளிநொச்சி.**

(C-3264)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

16.11.2021
மார்கழி 01, வியாழக்கிழமை
திரயோதசி பின்னிரவு 6.02 மணிவரை
பரணி முற்பகல் 9.49 மணிவரை
சுபநேரம் 7.52-9.22 மணிவரை
இராகுகாலம் 1.52-3.22 மணிவரை
சந்திராஷ்டமம்: சித்திரை
கார்த்திகை, பிரதோச விரதம்

வளவன்

**மேஷம்**
நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், சிலர் மீது காரண மில்லாமல் கோபம் ஏற்படலாம், வேலைச்சுமை கூடும், ஆரோக்கியத்தில் அக்கறை கூடும்.

**ரிஷபம்**
சிந்தித்து செயற்படவேண்டிய நாள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், காரிய அலைச்சல்கள் சற்று கூடும், மனச்சஞ்சலங்கள் கூடும் வாய்ப்புண்டு.

**மிதுனம்**
பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், இனிய செய்திகள் இல்லம் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கடகம்**
கண்ணியம் மிக்க ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், நண்பர்கள் மத்தியில் பாராட்டும் புகழும் கூடும் நாள்.

**சிம்மம்**
மறைமுக எதிர்ப்புக்கள் அகன்று வியாபார விருத்தி ஏற்படும், கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும், திடீர் திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், ஆன்றோர் சந்திப்புண்டு.

**கன்னி**
மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், ஒரு வகையில் வந்த வரவுகள் இன்னொரு வகையில் விரயமாகலாம், திருடர் பயமுண்டு.

**துலாம்**
பொதுநலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், நண்பர்களின் வழியில் நன்மைகள் நடைபெறும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**விருச்சிகம்**
அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், எடுத்த காரியத்தில் முன்னேற்றம் காணும் நாள்.

**தனுசு**
மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், உறவினர்கள் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், தாழ்ந்த சுபாவமுண்டு, எதிர்பார்ப்புகள் நிறைவேறலாம்.

**மகரம்**
உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல யோசனைகளைக் கூறலாம், வர வேண்டிய பணவரவுகள் வந்து சேரலாம், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.

**கும்பம்**
தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பொன்னான நாள், மூத்த சகோதரர்கள் உங்கள் நலனில் அக்கறை காட்டுவர்.

**மீனம்**
குடும்பத்திற்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், பொது நல ஈடுபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டும் நாள்.

உண்மையான அடக்கம் எல்லாவிதமான நற்பண்புகளுக்கும் அடிப்படை

# பயங்கரவாத தடைச்சட்டத்தை திருத்தியமைக்குமாறு ஐ.நா. வலியுறுத்து

(கொழும்பு)

பயங்கரவாத தடைச்சட்டத்தை முழுமையாக மீளாய்விற்குட்படுத்தி, அதன் பாதகமான சரத்துக்களைத் திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் பயங்கரவாதத்தை இல்லாதொழிக்கும் பொறிமுறையின் கீழ் மனித உரிமைகளுக்கு உரியவாறு மதிப்பளிக்கப்படுவதுடன் அவை பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்துமாறும் வலியுறுத்தி ஐக்கிய நாடுகள் சபையின் 7 விசேட அறிக்கையாளர்கள் கூட்டாக இணைந்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்குக் கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளனர்.

அதுமாத்திரமன்றி அவசியமான திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் வரையில், பயங்கரவாத தடைச் சட்டத்தின் பயன்பாட்டை இடைநிறுத்துமாறும் அக்கடிதத்தின் ஊடாக ஐ.நா. விசேட அறிக்கையாளர்கள் அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளனர்.

கடந்த காலத்தில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த ஐ.நா. விசேட அறிக்கையாளர்கள் சிலர் பயங்கரவாத தடைச்சட்டத்தினால் ஏற்படக் கூடிய பாதகமான தாக்கங்களை சீர் செய்வதற்கான பரிந்துரைகளை உங்களுடைய அரசாங்கத்திடம் முன் வைத்திருந்தனர். இருப்பினும் அந்தப் பரிந்துரைகள் செயற்படுத்தப்படாதது மாத்திரமன்றி உரிமைகள் மேலும் மறுக்கப்படக் கூடியவாறான நடை முறைகள் உள்வாங்கப்பட்டமை கவலையளிக்கிறது.

அதேவேளை பயங்கரவாத தடைச்சட்டத்தில் மேற்கொள்வதற்கு எதிர் பார்த்திருக்கும் எந்த வொருதிருத்தமும் சர்வதேச மனித உரிமைகள் சட்டத்திற்கும் உங்களுடைய சர்வதேசக் கடப்பாடுகளுக்கும் ஏற்புடைய வகையிலும் அமைவதை உறுதிப்படுத்துமாறு வலியுறுத்துகின்றோம்.

ஆகவே உடனடியாகப் பயங்கரவாத தடைச்சட்டத்தை முழுமையாக மீளாய்விற்குட்படுத்தி, கரிசனைக்குரிய அனைத்து சரத்துக்களையும் திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் பயங்கரவாதத்தை இல்லாதொழிக்கும் பொறிமுறையின் கீழ் மனித உரிமைகளுக்கு உரியவாறு மதிப்பளிக்கப்படுவதுடன் அவை பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்துமாறும் அரசாங்கத்திடம் வலியுறுத்துகின்றோம். அதுமாத்திரமன்றி மேற்கூறப்பட்டவாறு அவ சியமான திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் வரையில், பயங்கரவாத தடை ச்சட்டத்தின் பயன்பாட்டை இடைநிறுத்துமாறும் கோருகின்றோம் என்று அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-5)


# 1ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்.திரு. வல்லிபுரம் இரத்தினசிங்கம்

பிறப்பு 08.03.1935

இறப்பு 27.12.2020

அன்புத் தெய்வமே ஆண்டுகள் பல ஆனாலும்
ஆறாது உம் நினைவுகள்
இன்பமது காணாமல் வாழ்கின்றோம் இவ்வுலகில்
என்றும் உன் நினைவுகளோடு


கம்பர் மலை,
வல்வெட்டி.

(C-3254)

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சாரம் தாக்கி யானை உயிரிழப்பு



(மன்னார்)
மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பரப்புக்கடந்தான் கிழக்கு பகுதியில் உள்ள தோட்டக்காணி ஒன்றில் இறந்த நிலையில் காட்டு யானை ஒன்று நேற்று புதன்கிழமை காலை கிராம மக்களினால் அடையாளம் காணப்பட்டது.

இந்த நிலையில் கிராம மக்கள் உடனடியாக உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் குறித்த யானையின் உடலை மீட்டு பரிசோதனைகளை மேற்கொண்டனர். இதன்போது குறித்த யானை மின்சாரம் தாக்கிய நிலையில் உயிரிழந்துள்ளதாக தெரிவித்தனர்.

இந்த நிலையில் மேலதிக விசாரணைகளை அடம்பன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-5-285)

# 'திருமுகம் 60' மலர் வெளியீடும் விருது வழங்கல் நிகழ்வும்



(யாழ்ப்பாணம்)
தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகனின் மணி விழாவையொட்டி 'திருமுகம் 60' மலர் வெளியீடும் இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது வழங்கலும் நாளை மறுதினம் 18 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் மாவை. ஆதீனகர்த்தா மகாராஜஸ்ரீ து.ஷ. இரத்தினசபாபதி குருக் கள், துர்க்காதேவி தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ. சு. செந்தில் ராஜக்குருக்கள், நல்லை ஆதீன குருமுதல்வர், ரிஷி தொண்டநாத சுவாமிகள், கம்பவாரிதி இ.ஜெயராஜ், பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், யாழ். அரச அதிபர் க.மகேசன், யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் சி.சற்குணராஜா, பேராசிரியர் சி.சிவலிங்கராஜா, வலி.வடக்கு பிரதேச செயலாளர் ச.சிவஸ்ரீ ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (4-5)

# திருவாதிரை உற்சவம்

(யாழ்ப்பாணம்)
யாழ்/ வண் வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம் திருவாதிரை உற்சவம் எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு அபிஷேகம், மூலமூர்த்தி பூஜையுடன் திரு வெம்பாவை அருளப்பட்டு பூஜைகள் இடம் பெறும்.

அதனைத் தொடர்ந்து வசந்தமண்டப் பூஜையுடன் விநாயகப் பெருமான் உள் வீதி, வெளி வீதி வலம் வருவார் என சிவஸ்ரீ து.விவேகானந்தக் குருக்கள் அறிவித்துள்ளார். (4-5)

# ரிஜடி விசாரணை

(நெளுக்குளம்)
வன்னி மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனின் செயலாளரான கனகலிங்கம் சிறிமதனை வவுனியா, குடியிருப்பு பகுதியில் வழிமறித்த பயங்கரவாதத் தடுப்பு விசாரணைப் பிரிவினர் (ரிஜடி) அரை மணி நேரம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். நேற்று முன்தினம் இரவு 6.30 மணியளவில் குறித்த சம்பவம் இடம் பெற்றுள்ளது. (4-5-299)

## மாநகர சபையின் பாதீடு நிறைவேற்றம் வெடி கொளுத்திக் கொண்டாட்டம்



(குப்பிழான்)
யாழ். மாநகர சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான பாதீடு மூன்று மேலதிக வாக்குகளால் நேற்றுப் புதன் கிழமை சபையில் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது.

பகிரங்க வாக்கெடுப்பைத் தொடர்ந்து இது தொடர்பான உத்தியோகபூர்வ முடிவுகள் அறிவிக்கப்பட்ட சில நிமிடங்களில் யாழ்.மாநகரசபை முன்பாக சரவெடிகள் கொளுத்தப்பட்டு வெற்றி கொண்டாடப்பட்டது. (4-5-18)

## நோயாளியை பொறுப்பேற்கவும்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் ஆத்திசூடி வீதியைச் சேர்ந்த 59 வயதுடைய எஸ்.குணாளன் என்பவர் நேற்று முன்தினம் 14 ஆம் திகதி காலை யாழ்.போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

குறித்த நோயாளி சுய நினைவின்றி வீதியில் விழுந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

நோயாளியை உறவினர்கள் உடனடியாக பொறுப் பேற்குமாறு யாழ்.போதனா மருத்துவமனை பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி.யமுனாநந்தா அறிவித்துள்ளார். (4-5)

# பூநகரி பிரதேச சபை பாதீடு மீண்டும் தோற்கடிப்பு

(முறிகண்டி)
பூநகரி பிரதேச சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு- செலவு திட்டம் ஆளும் தரப்பினாலேயே இரண்டாவது தடவையாகவும் தோற்கடிக்கப் பட்டது.

2022ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு கடந்த மாதம் 23 ஆம் திகதி வாக்கெடுப்பு இடம் பெற்றது. குறித்த பாதீடு 2 மேலதிக வாக்குகளால் தோற்கடிக் கப்பட்டது.

இந்த நிலையில் இரண்டாவது பாதீடு நேற்று சமர்ப்பிக்கப்பட்டு வாக்கெடுப்பிற்கு விடப்பட்டது. இதன்போது குறித்த பாதீடு 3 மேலதிக வாக்குகளால் மீண்டும் தோற்கடிக்கப்பட்டது. (4-5-100)

# அதிக விலையில் பாண் விற்றால் சட்ட நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்டத்தில் சில பிரதேசங்களில் நடமாடும் பாண் வியாபாரிகளால் பாண், பணிஸ் என்பவை அதிக விலையில் விற்கப்படுவதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என யாழ் மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இவ்விலை அதிகரிப்பு குறித்து சம்பந்தப்பட்ட பேக்கரி உரிமையாளர்கள் கவனமெடுக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளது.

மேலும் இதுபோன்ற சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறுமானால் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை மூலம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளது. (4-5)

## அருளாசியுரையும் வேதபாராயணமும்

(யாழ்ப்பாணம்)
இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இடம்பெற்று வரும் இறை ஆசி வேண்டிய பிரார்த்தனை வரிசையில் நாளை வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு தெல்லிப்பழை கட்டுவன் அகிலை சபரிகிரி ஐயப்பசுவாமி தேவஸ்தான பிரதம குருக்கள் சிவஸ்ரீ. அ. ஐயப்பதாஷக்குருக்களின் அருளாசியுரையும் வேதபாராயண நிகழ்வும் இடம் பெறவுள்ளன. இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலிபரப்பாக இடம்பெறவுள்ளது. (4)

## கால்நடைகளை கட்டி வளர்க்கவும் இல்லையேல் அபராதம்

### நல்லூர் பிரதேச சபை

(யாழ்ப்பாணம்)
நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் ஆடுகள் மற்றும் மாடுகளை கட்டி வளர்க்குமாறு நல்லூர் பிரதேச நிர்வாகம் கால்நடை வளர்ப்பாளர்களுக்கு அறிவித்தல் விடுத்துள்ளது.

வீடுகளில் கட்டி வைத்து வளர்க்க வேண்டிய ஆடுகள், மாடுகளை கட்டவிழ்த்து கட்டாக்காலிகளாக வீதிகளில் விடுவதனால் போக்குவரத்திற்கு இடையூறு விளைவிப்பது மாத்திரமன்றி விபத் துக்களும் இடம்பெறுகின்றன.

இனிவரும் காலங்களிலும் நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் ஆடுகள், மாடுகள் கட்டவிழ்த்து கட்டக்காலிகளாக திரியும் பட்சத்தில் நல்லூர் பிரதேச சபையினர் அவற்றைக் கையகப்படுத்துவதுடன், அதற்கான தண்டமும் அறவிடப்படும் என நல்லூர் பிரதேச சபை நிர்வாகம் மேலும் தெரிவித்துள்ளது. (4-5-18)



இலங்கை மற்றும் மாலைதீவுக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் **David Holly** யாழ். போதனா மருத்துவமனைக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்துள்ளார். இதன் போது மருத்துவமனையின் செயற்பாடுகள் பற்றியும் கேட்டறிந்தார். (படம்: சிவசாந்தன்)

## தெய்வீக கலையரங்கு

(யாழ்ப்பாணம்)
காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் நடத்தும் தெய்வீக கலையரங்கு இன்று 16 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கில் நடைபெறவுள்ளதென ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (4)

## வல்வெட்டித்துறை நகர சபை தவிசாளராக மீண்டும் செல்வேந்திரா

(யாழ்ப்பாணம்)
வல்வெட்டித்துறை நகர சபை தவிசாளராக என். செல்வேந்திரா மீண்டும் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

வல்வெட்டித்துறை நகர சபையின் பாதீடு கடந்த மாதம் தவிசாளரான என். செல்வேந்திராவால் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் தோற்கடிக்கப்பட்டது. அதனை அடுத்து நேற்று புதிய தவிசாளருக்கான தெரிவு இடம்பெற்றது.

அதன்போது மீண்டும் சுயேட்சைக் குழு சார்பில் என். செல்வேந்திரா போட்டியிட்ட நிலையில் மீண்டும் தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். (4-5-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் பிரதேச சபை 2022 ஆம் ஆண்டிற்கான பொது அறிவித்தல்

| இல. | விடயம் | அறிவித்தல் 01.01.2022 முதல் |
|---|---|---|
| 01 | ஆதனவரி | 2022 ஆம் ஆண்டுக்கான ஆதனவரியை 31.01.2022 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துவோர் ஆண்டுக்கான மொத்தவரியில் **10%** கழிவினைப் பெற்றுக் கொள்ளமுடியும் என்பதோடு ஒவ்வொரு காலாண்டிற்குமுரிய வரியை குறித்த கந்தாயத்தின் முதல் மாதமுடிவிற்குள் செலுத்துவோருக்கு காலாண்டுவரியில் **5%** கழிவு வழங்கப்படும் என்பதையும் அறியத் தருகின்றேன். குறிப்பிட்ட திகதிக்குள் ஆதனவரியை செலுத்த தவறின் விறாந்துக் கட்டணமாக வெற்றுக்காணி அல்லது வதிவிட ஆதனங்களுக்கு **15%** உம் ஏனைய ஆதனங்களுக்கு **20%** உம் ஆதனவரியுடன் சேர்த்து அறவிடப்படும். எனவே குறித்த ஆதனவரிகளை 31.01.2022ஆம் திகதிக்கு முன் எமது உப அலுவலகங்களில் முழுமையாகச் செலுத்தி வரிக்கழிவுகளைப் பெற்று ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். |
| 02 | ஆதனப் பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்தல் | ஆதனப் பெயர் மாற்றம் செய்வதற்குரிய ஆவணங்களை பிரதேசசபை உப அலுவலகங்களில் சமர்ப்பித்து பெயர் மாற்றம் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். |
| 03 | 1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேசசபைச் சட்டம்/ பிற சட்டத்தின் கீழ் கட்டட அனுமதி வழங்கல் | 1. தங்களது ஆதனத்தில் புதிதாக கட்டடங்கள், எல்லைச்சுவர் அமைப்பதாயின் அல்லது பழைய கட்டடத்தினை புனரமைப்பதாயின் பிரதேச சபையில் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து அனுமதிபெற்ற பின்னரே கட்டடங்கள், எல்லைச்சுவர் அமைக்கப்படல் வேண்டும்.<br>2. புதிய கட்டட விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கும் போது மழைநீர் சேகரிப்பு கட்டுமானங்கள் கட்டாயம் அமைக்கப்படுதல் வேண்டும்<br>3. புதிய கட்டடம் அமைப்பதற்கு அனுமதி பெற்றவர்கள் அனுமதிபெற்ற திகதியிலிருந்து ஒருவருட காலத்தினுள் வேலை பூர்த்தியடையாவிடின் உரியகட்டணம் செலுத்தி கட்டடஅனுமதியைப் புதுப்பிக்கவேண்டும்.<br>4. கட்டடம் கட்டி முடிக்கப்பட்டதும் பிரதேசசபை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து உரிய கட்டணத்தை செலுத்தி அமைவுச் சான்றிதழைப் **(COC)** பெற்றுக்கொண்ட பின்னரே கட்டடத்தில் குடிபுகுதல் வேண்டும்.<br>5. சபை எல்லைக்குள் குழாய்க் கிணறுகள் அமைப்பவர்கள் சபையின் அனுமதிபெற்று அமைத்தல் வேண்டும்.<br>6. பொதுப்போக்குவரத்திற்கு இடையூறாக சபை அனுமதியின்றி வீதியோரங்களில் அமைக்கப்படும் நிரந்தர அலங்கார அமைப்புக்கள் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது. |
| 04 | சூழல் பாதுகாப்பு உரிமம் | சூழல் பாதுகாப்பு உரிமம் பெற்றுக்கொள்ள வேண்டிய செயற்பாடு தொடர்பாக 2000ஆம் ஆண்டு நவம்பர் 22ஆம் திகதி 1159/22ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் "இ" பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்/ வியாபார நடவடிக்கைகளை பிரதேசசபை எல்லைக்குள் மேற்கொள்பவர்கள் அலுவலகத்துடன் தொடர்புகொண்டு விண்ணப்பப்படிவங்களைப் பெற்று பூர்த்திசெய்து உரிய கட்டணத்தைச் செலுத்தி சூழல் பாதுகாப்பு உரிமத்தினைப் பெற்றுக்கொள்ளவேண்டும். |
| 05 | வியாபார அனுமதிப் பத்திரம் 2021 | இப்பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் மற்றும் எமது பிரதேசத்திற்குப் பொருட்களை விநியோகிப்போர் உரிய விண்ணப்பப்படிவத்தை சபையின் கொக்குவில், நல்லூர் ஆகிய உப அலுவலகங்களில் 2022ஆம் ஆண்டு ஜனவரி 15ஆம் திகதிக்குள் பெற்று அதனைப் பூரணப்படுத்தி உரிய உப அலுவலகங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 31.03.2022ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி வியாபார அனுமதிப்பத்திரத்தை **(Trade license)** பெற்றுக்கொள்ளவும். 31.03.2022ஆம் திகதிக்கு முன்னர் வியாபார அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். |
| 06 | துவிச்சக்கரவண்டி உரிமம் | துவிச்சக்கரவண்டிகள் வைத்திருப்போர் 2022.03.31ஆம் திகதிக்குமுன் உரிய உப அலுவலகங்களில் உரிய கட்டணங்களை செலுத்தி 2022ஆம் ஆண்டுக்கான துவிச்சக்கரவண்டி உரிமங்களைப் பெற்றுக்கொள்ளவும். |
| 07 | மிருகங்களுக்கான உரிமம் | வளர்ப்பு நாய்கள் வைத்திருப்போர் 2022.03.31ஆம் திகதிக்கு முன் உப அலுவலகங்களில் உரிய கட்டணங்களைச் செலுத்தி 2022ஆம் ஆண்டுக்கான மிருக உரிமங்களைப் பெற்றுக்கொள்ளவும். |
| 08 | விளம்பரங்கள் அமைத்தல் அல்லது காட்சிப்படுத்தல் | பிரதேசசபை எல்லைக்குள் அமைக்கப்படும் விளம்பரப் பலகைகளுக்கு பிரதேசசபையின் அனுமதியைப் பெற்றே விளம்பரங்களைக் காட்சிப்படுத்த வேண்டும். அனுமதி பெறப்படாத விளம்பரங்கள் சபையினால் அகற்றப்படும். |
| 09 | வீதி ஒழுங்கும் தெருவோர வியாபாரமும் | வீதி ஒழுங்கைப் பேணி நடக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றது. வியாபார நிலையங்களிற்கு முன்னால் பாதசாரிகளின் போக்குவரத்திற்கு இடையூறாக பொருட்களை வெளியே வைத்து விற்பனை செய்வது, காட்சிப்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு வர்த்தக நிலைய உரிமையாளர்களிற்கு அறியத்தருகின்றேன். சந்தைச் சுற்றாடலில் இருந்து 500மீற்றர் சுற்றுவட்டாரத்தில் கடல் உணவுகள், மரக்கறி, முட்டை என்பன விற்பது தடை செய்யப்பட்டுள்ளது. சுகாதாரத்திற்கு ஒவ்வாத அனுமதியற்ற நடமாடும் சுண்டல், சோளம் மற்றும் தீன்பண்ட விற்பனை தடை செய்யப்படுகின்றது. ( விசேட சந்தர்ப்பங்களில் உரிய அனுமதி பெறப்படல் வேண்டும்) |
| 10 | பொதுச் சுகாதாரத்தைப் பேணுதல் | உணவு கையாளும் நிலையப் பணியாளர்கள் மருத்துவப் பரிசோதனை மேற்கொண்டு அனுமதி பெற்றிருத்தல் வேண்டும்.<br>2034/33ஆம் இலக்க 2017.09.01 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையின் பிரகாரம் 20 மைக்ரோன் அல்லது அதற்கு குறைவான தடிப்புள்ள பொலித்தீன் பாவனை தடைசெய்யப்பட்டுள்ளது.<br>பொதுச்சந்தை, பொது இடங்களில் கொவிட் **(Covid)** 19 பாதுகாப்பிற்கான முகக்கவசம் அணிவதும், சமூக இடைவெளி பேணுவது கட்டாயம் என்பதுடன் வியாபார நிலையம், திருமண மண்டபம் போன்றவற்றில் கை கழுவுவதற்கான வசதி மேற்கொள்ள வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. |
| 11 | பொது இடங்களில் கழிவு போடுதலும் டெங்கு நுளம்புப் பெருக்கத்திற்கு ஊக்கம் அளிப்பதும் | திண்மக் கழிவுகளை பிரதேச சபைக்கு ஒப்படைக்கும்போது அவை தரம்பிரித்து வழங்கப்படவேண்டும் என்பதுடன் திண்மக்கழிவுகள் பொது இடத்தில் கொட்டுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவாக சுற்றுச் சூழலை வைத்திருப்போர் மீதும் உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.<br>அபிவிருத்தி செய்யப்படாத காணிகளில் உள்ள பற்றைகள் துப்புரவு செய்யப்படல் வேண்டும்- தவறின் உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்<br>பொதுப்போக்குவரத்திற்கு இடையூறாக அனுமதியின்றி வீதியோரங்களில் மரங்கள், பூமரங்கள் நாட்டுதல் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது. |
| 12 | பட வரைஞர்களை பதிவு செய்தல் | 2022 ஆம் ஆண்டு படவரைஞராகப் பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2022 ஆம் ஆண்டு பங்குனி 31 ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளவும்/ புதுப்பித்துக்கொள்ளவும். மேலதிக விபரங்களுக்கு தலைமை அலுவலகத்துடன் அலுவலக நேரத்தில் தொடர்புகொள்ளவும். |
| 13 | தரகர் முறைநீக்கல் கழிவு நடைமுறைக்கு தடை | எமது பிரதேசசபை எல்லைக்குட்பட்ட சந்தைகளில் தரகர் மூலமான நடைமுறை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறும், நிலக்கீழ் விளைச்சல் தவிர்ந்த ஏனைய மரக்கறிகளுக்கு கழிவுமுறை முற்றாக தடை செய்யப்படுகின்றது என்பது அறியத்தரப்படுகின்றது. |
| 14 | இரசாயன மருந்து விசிறிய பழங்கள் | அனுமதியற்ற நியமங்களை மீறி மருந்து விசிறிய பழங்கள் விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. |
| 15 | கட்டாக்காலிகள் | பொதுவீதியில் அலைந்து திரியும் கட்டாக்காலிகள் சபையால் பிடிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| 16 | கழிவுநீர் | பகிரங்க வடிகால்களில் அனுமதியின்றி வீட்டுக்கழிவுநீர், வியாபார கழிவுநீர் சேர்க்கப்பட்டால் சட்டவிரோதமானது என உரியவர்கள்மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| 17 | பொதுப் போக்குவரத்து மற்றும் டெங்கு இடையூறான பெரும் கட்டுமான பொருட்கள் | பொதுவீதியில் சபை அனுமதியின்றி கட்டுமான பொருட்கள் சேகரித்து வைத்தல், உரிய குறியீடுகள் காட்சிப்படுத்தாதுவிடல் மற்றும் டெங்குநோய் காவி பரவும் ஆபத்தான நிலைமைகளை பேணுதல் தவிர்க்கப்பட வேண்டும் |

மேற்கூறிய விடயங்கள் தொடர்பில் பொதுமக்கள் மற்றும் தொழில்புரிபவர்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது. குறித்த அறிவித்தலின் பிரகாரம் செயற்படத் தவறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(C-3263) **தவிசாளர், நல்லூர் பிரதேச சபை, நல்லூர். 021 222 2700**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலட்சியப்படுத்தாதீர்கள்!

# எதிர்பார்த்ததை விட ஓமிக்ரோன் வேகமாகப் பரவி வருகிறது

## உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை



(ஜெனிவா)

**ஒமக்ரோன் மாறுபாடு முன்னெப்போதும் இல்லாத வேகத்தில் உலகம் முழுவதும் பரவி வருவதாகவும் அதைக் கட்டுப்படுத்த நாடுகள் துரிதமாகச் செயற்பட வேண்டும் என்றும் உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.**

இதுவரை ஓமிக்ரோன் மாறுபாடு 77 நாடுகளில் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் மாறுபாட்டைச் சமாளிக்க அந்நாடுகள் போதுமான கரிசனை எடுக்கவில்லை என்றும் அதன் தலைமை பணிப்பாளர் டெட்ரோரஸ் அதானோம் கெட்ரேயல் கவலை வெளியிட்டார்.

இதேநேரம் இதற்கு முன்னர் பரவிய கொரோனா மாறுபாடுகளை விட ஒமிக்ரோன் மாறுபாடு அடையாளம் காணப்படாமலேயே பரவியிருக்கக் கூடும் எனத் தாம் நம்புவதாக அவர் தெரிவித்தார்.

ஓமிக்ரோன் பரப்பும் நோய் மிதமானது என முடிவுக்கு வரவேண்டாம் என உலக சுகாதார ஸ்தாபனத்தை சேர்ந்த நிபுணர்களும் எச்சரித்துள்ளனர்

அவ்வாறு எண்ணினால் உலகம் மிக ஆபத்தான நிலைமையைச் சந்திக்க நேரலாம் என்று அவர்கள் அச்சம் தெரிவித்தனர். (நி-5)

## கொவிட் அனுமதி அட்டை இங்கிலாந்தில் கட்டாயம்

(லண்டன்)

இங்கிலாந்தில் கொவிட் அனுமதி அட்டை நடைமுறை அமுலுக்கு வந்துள்ளது. பிரித்தானியப் பிரதமர் போரிஸ் ஜோன்ஸனின் இந்தத் திட்டம் மீதான வாக்கெடுப்பில், அவரது கன்சர்வேட்டிவ் கட்சியைச் சேர்ந்த சுமார் 100 உறுப்பினர்கள் எதிராக வாக்களித்திருந்த போதிலும், தொழிற்கட்சி உறுப்பினர்களின் ஆதரவுடன் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதனையடுத்து, இரவு நேர களியாட்ட நிலையங்கள், விளையாட்டுப் போட்டிகள் மற்றும் பாரிய நிகழ்வுகளுக்குச் செல்வதற்கு வயது வந்தோரிடம் கொவிட் அனுமதி அட்டை இருக்க வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இரு தடுப்பூசிகளையும் ஏற்றிக்கொண்டதற்கான அட்டை அல்லது அண்மையில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில், தொற்றில்லையென்ற சான்றிதழ் ஆகியவற்றில் ஒன்றை கொவிட் அனுமதி அட்டையாகப் பயன்படுத்த முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

## எரிபொருள் தாங்கி வெடித்து சுமார் 60 பேர் உயிரிழப்பு

### ஹெய்ட்டியில் துயரம்



(ஹெய்ட்டி)

வடக்கு ஹெய்ட்டியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை எரிபொருள் தாங்கி ஒன்று வெடித்து சிதறியதால்60 இற்கும்மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

கெப் ஹெய்ட்டியில் எரிபொருள் தாங்கி விபத்துக்குள்ளானபோது பொதுமக்கள் அதில் இருந்து கசிந்த எரிபொருளை சேகரிக்க முய ன்ற போது வெடிப்புச் சம்பவம் ஏற்பட்டுள்ளது.

இதன்போது காயமடைந்த பலர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் இறப்பு எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்றும் உள்ளூர் அதிகாரிகள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

மேலும் இந்த வெடிப்பு சம்பவத்தினால், குறித்த பகுதியில் உள்ள சுமார் 20 வீடுகளில் தீப்பரவல் ஏற்பட்டதாக கெப் ஹெய்ட்டியின் நகர பிரதி முதல்வர் தெரிவித்துள்ளார். (நி-5)

## ஆந்திராவில்

# நீரோடையில் கவிழ்ந்த பேருந்து; ஒன்பது பேர் உயிரிழப்பு



(டில்லி)

ஆந்திர மாநிலம் மேற்கு கோதாவரி மாவட்டத்தில் பேருந்து ஒன்று நீரோடையில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் ஒன்பது பேர் உயிரிழந்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

47 பேருடன் பயணித்த பேருந்தே நேற்றுக்காலை ஜல்லேரு வாகு என்ற நீரோடையில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது.

உயிரிழந்தவர்களில் பேருந்தின் சாரதியும், 5 பெண்களும் உட்பட ஒன்பது பேர் உயிரிழந்துள்ளனர். (நி-5)

## இஸ்ரேல் பிரதமர் சுயதனிமைப்படுத்தலில்

(ஜெருசலேம்)

இஸ்ரேல்-ஐக்கிய அரபு அமீரகம் இடையே தூதரக உறவு இயல்பாக்கப்பட்ட பின்னர் இஸ்ரேல் பிரதமர் நப்தாலி பென்னட் முதல் முறையாக கடந்த ஞாயிற்றுக்கிழமை ஐக்கிய அரபு அமீரகம் சென்றார்.

அங்கு அவர் தனது ப்பயணத்தை முடித்துக் கொண்டு கடந்த திங்கட்கிழமை தனி விமானம் மூலம் இஸ்ரேல் திரும்பினார்.

இந்த நிலையில் விமானத்தில் பிரதமர் நப்தாலி பென்னட்டுடன் பயணம் செய்த ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து, சுகாதார அமைச்சகத்தின் விதிமுறைகளின்படி நப்தாலி பென்னட் தன்னைத்தானே தனிமைப்படுத்திக்கொண்டார்.

கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்ட அந்த நபர் யார்? அவருக்கு ஒமிக்ரோன் பாதிப்பு உள்ளதா? என்பன உள்ளிட்ட தகவல்கள் இதுவரை வெளியாகவில்லை. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனத்தூதுவரின் வருகைக்காக வவுனியாவில் பலப்படுத்தப்பட்ட பாதுகாப்பு

(நெளுக்குளம்)

சீனத்தூதுவர் கீ சென் ஹொங் யாழ்ப்பாண விஜயத்தை முன்னிட்டு நேற்று வவுனியாவில் கடுமையான பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

சீனாவின் தூதுவர் கீ சென் ஹொங் சீனத்தூதரகத்தின் அன்பளிப்பில் யாழ்ப்பாணம், மன்னார் மாவட்ட மீனவர்களிற்கு நிவாரணப் பொருட்கள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொள்வதற்காக நேற்று வடக்கிற்கு விஜயம் செய்தார்.



வவுனியாவில் அமைந்துள்ள வன்னி கூட்டுப்படைகளின் தலைமையகத்திற்கு நேற்றுக் காலை வருகை தந்தார். அவரது வருகைக்காக வவுனியா நகரப்பகுதி உட்பட பல்வேறு பகுதிகளிலும் வீதிகளிலும் இராணுவம் மற்றும் பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டன. (4-5-299)

# துப்பாக்கி ரவைகள் நேற்றும் மீட்பு



(கண்டாவளை)

கிளிநொச்சி கோரக்கன் கட்டுப்பகுதியில் உள்ள தனியார் காணியொன்றில் இருந்து நேற்றும் துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டன.

கண்டாவளை கோரக்கன் கட்டு பூங்காவன சந்திப்பகுதியில் உள்ள தனியார் காணி ஒன்றில் கடந்த ஞாயிற்றுக் கிழமை குழி ஒன்றை வெட்டிய போது சில துப்பாக்கி ரவைகள் அடையாளம் காணப்பட்டதை அடுத்து கிளிநொச்சி பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

இதனையடுத்து கடந்த திங்கட்கிழமை சம்பவ இடத்துக்கு சென்ற கிளிநொச்சி பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினரும் குறித்த பகுதியில் இருந்து துப்பாக்கி ரவைகள் அடங்கிய இரு பெட்டிகளை மீட்டதுடன் இது தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற கட்டளைக்கு அமைவாக குறித்த பகுதி கிராம உத்தியோகத்தர் கோணாமலை சேகர் முன்னிலையில் நேற்று அகழ்வுப்பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

குறித்த அகழ்வின் போது பெருமளவான துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (4-5-315-316)

# சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய உணவகத்திற்கு சீல்

(முறிகண்டி)

சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய உணவகத்தினை சுகாதாரத் தரப்பினர் தற்காலிகமாக மூடி சட்ட நடவடிக்கை எடுத்துள்ளனர்.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் கிளிநொச்சியில் இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி நகரில் உள்ள உணவகம் ஒன்றே இவ்வாறு சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக கரைச்சி பிரதேச சபையினர் தெரிவித்தனர்.

கிளிநொச்சி நகரில் உள்ள உணவகங்கள் உள்ளிட்ட வர்த்தக வர்த்தக நிலையங்களை கரைச்சிப் பிரதேச சபையினரும், சுற்றாடல் அதிகார சபையும் இணைந்து விசேட சோதனை மேற்கொண்டிருந்தனர்.

இந்த நிலையில் குறித்த உணவகத்தில் காணப்பட்ட சுகாதார சீர்கேடு தொடர்பில் குறித்த தரப்பினால் கிளிநொச்சி சுகாதார பரிசோதகர்களுக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து அங்கு விரைந்த சுகாதார பரிசோதகர்கள் குறித்த உணவகத்தை தற்காலிகமாக மூட பணித்துள்ளனர்.

இதேவேளை உணவக உரிமையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (4-5-100-316)

# வீதிப் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு

(முறிகண்டி)

கிளிநொச்சி லிட்டில் எய்ட் திறன் விருத்தி மையத்தினால் நேற்று வீதி பாதுகாப்பு விழிப்புணர்வு செயற்றிட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்திற்கு முன்பாக இடம்பெற்ற குறித்த விழிப்புணர்வு செயற்பாட்டின்போது, கவனயீர்ப்பிலும், துண்டுப்பிரசுர விநியோகத்திலும் அவர்கள் ஈடுபட்டனர்.

சாரதிகள் மதுபோதையில் வாகனத்தை செலுத்துதல், பாதசாரி கடவைகளிற்கு முக்கியத்துவம் கொடுத்தல், வேகக் கட்டுப்பாட்டை பேணுதல் உள்ளிட்ட விடயங்கள் இதன்போது வலியுறுத்தப்பட்டன.(4-5-100-316)



# நீர் இணைப்பு பெறுவதில் சிக்கலாயின் தொடர்பு கொள்ளவும்

(பனிக்கன்குளம்)

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் குழாய் வழி குடிநீர் இணைப்பை பெற்றுக்கொண்ட மக்களுக்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் அறிவிப்பு ஒன்றை விடுத்துள்ளனர்.

அந்த வகையில் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினரால் குழாய் வழியாக வழங்கப்படுகின்ற நீர் இணைப்பை பெற்றுக் கொண்ட மக்கள் நீர் இணைப்பை பெற்றும் இதுவரை மாதாந்த கட்டணப் பட்டியல் கிடைக்கப்பெறாதவர்கள், நீர்மானி பொருத்தியும் நீரைப் பெற்றுக்கொள்ள முடியாதவர்கள், நீர்மானியில் பிரச்சினைகள் உள்ளவர்கள் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் அமைந்துள்ள தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் அலுவலகத்திலோ அல்லது கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட பொறியியலாளர் அலுவலக தொலைபேசி இலக்கமான 021 228 3981 எனும் தொலைபேசி இலகத்துடனோ தொடர்பு கொண்டு தங்களது பிரச்சினைகளை நிவர்த்தி செய்து கொள்ளுமாறு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் கிளிநொச்சி,முல்லைத்தீவு மாவட்ட பொறியியலாளர் காரியாலயம் அறிவித்துள்ளது. (4-5-281)

# செட்டிகுளம் பிரதேச சபையின் பாதீடு நிறைவேற்றம்

(குருமன்காடு)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்கு உட்பட்ட வவுனியா, செட்டிகுளம் பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான பாதீடு 4 மேலதிக வாக்குளால் வெற்றி பெற்றுள்ளது.

வவுனியா, செட்டிகுளம் பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான பாதீடு நேற்று முன்தினம் சபைத் தவிசாளர் சு.ஜெகதீஸ்வரனால் முன்வைக்கப்பட்டது.

தொடர்ந்து பாதீடு வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. பாதீட்டுக்கு ஆதரவாக 10 உறுப்பினர்கள் வாக்களித்தனர். பாதீட்டுக்கு எதிராக 6 பேர் வாக்களித்தனர்.

இதனால் 4 மேலதிக வாக்குகளால் சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான பாதீடு வெற்றி பெற்றது. (4-5-250)

# யானை சேதப்படுத்திய வீட்டை அதிகாரிகள் எவரும் பார்வையிடவில்லை

## வீட்டு உரிமையாளர் ஆதங்கம்



(அக்கராயன்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மன்னாங்கண்டல் கிரா மத்தில் யானையால் சேதப்படுத்திய வீட்டை அதிகாரிகள் எவரும் வந்து பார்வையிடவில்லை என வீட்டின் உரிமையாளர் கவலை தெரிவித்தார்.

கடந்த 10 நாட்களுக்கு முன்னர் மன்னாங்கண்டல் கிராமத்தில் க.தர்மராஜா என்பவரின் வீடு யானையால் சேதமாக்கப்பட்டது. வீட்டிற்கு ஏற் பட்ட சேதம் தொடர்பாக அதிகா ரிகளுக்கு அறிவித்த போதிலும் அதிகாரிகள் வருகை தரவில்லை என குறித்த குடும்பத்தினரால் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மன்னாங் கண்டல் கிராமத்தில் யானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படும் நிலையில் யானைகளைக் கட்டுப்படுத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (4-5-350)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லாட்சியை நாசமாக்கியோருடன் கூட்டுச்சேர மாட்டோம்-ஐ.ம.ச.

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியின் கடந்தகால செயற்பாடுகள் காரணமாகவே அரசாங்கம் வீழ்ச்சி கண்டது. எனவே ஐக்கிய மக்கள் சக்தியின் தனி அரசாங்கமே உருவாக்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

நிகழ்கால அரசியல் செயற்பாடுகள் குறித்து கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசிய கட்சி பல உறுப்பினர்கள் எம்முடன் இணைந்து கொள்ளத் தயாராக உள்ளனர். ஆனால் அவர்களை இணைத்துக்கொள்ள நாம் தயாரில்லை.

அதேபோல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலும் பல தூய்மையான அரசியல்வாதிகள் உள்ளனர். அவர்களையும் இணைத்துக்கொண்டு பரந்த அணியாக பலமான அரசாங்கத்தை அமைக்க முடியும்.


ஆனால் நல்லாட்சியை நாசமாக்கிய ரணில் விக்கிரமசிங்க, மைத்திரிபால சிறிசேனவுடன் இனி ஒருபோதும் கூட்டணிக்கு நாம் தயாரில்லை என சரத் பொன்சேகா தெரிவித்தார். (நி-5)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்



## விரதங்கள்

## நினைத்ததை நிறைவேற்றும் துளசி பூஜை



### துளசியின் கதை

இத்தனை மகிமையும் மகத்துவமும் வாய்ந்த துளசி, பூலோகம் வந்த கதை தெய்வீகமானது.

துளசித் தாய் பூமியில் 'பிருந்தை' என்ற பெயரில் பிறந்து, ஜலந்தரன் என்ற அரக்கனை திருமணம் செய்து இருந்தாள். ஜலந்தரன் கடும் தவம் செய்து அதனால் பெற்ற வரத்தால் தேவர்களை கொடுமைப்படுத்தினான். இதனால் தங்களை காப்பாற்றும்படி தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட்டனர்.

இதைத் தொடர்ந்து, ஜலந்தரன் சிவனிடம் போரிட வேண்டி கயிலைக்கு புறப்பட்டுக் கொண்டு இருந்தான். அவன் முன் ஒரு அந்தணர் வேடத்தில் தோன்றிய சிவன் அவனிடம் பேசினார். அப்போது ஜலந்தரன் தன்னால் எதையும் செய்ய முடியும். என்னால் முடியாதது எதுவும் இல்லை என்று இறுமாப்புடன் கூறினான்.

உடனே அந்தணர் வடிவில் இருந்த சிவபெருமான் தன் கால் பெருவிரலால் மண்ணில் ஒரு வட்டமிட்டு அந்த வட்டத்தை பெயர்த்து எடுத்து தலைமீது வைக்க வேண்டும் என்று கூறினார். ஜலந்தரன் அந்த வட்டத்தை பெயர்க்கும் முயற்சியில் ஈடுபட்டான். இரு கரங்களாலும் அதனைப் பெயர்த்து தலைக்கு மேல் தூக்கி தாங்கினான். உடனே அந்த வட்ட சக்கரம் அவன் உடலை இரு கூறுகளாகப் பிளந்து, மீண்டும் அனல் கக்கும் தீப் பிழம்பாக மாறி சிவனின் திருக்கரத்தை சென்றடைந்தது.

இதற்கிடையில் கயிலைக்குச் சென்ற கணவன் திரும்பி வராததை கண்ட பிருந்தை கவலை அடைந்தாள். அவளது கற்பு என்று அழிகிறதோ அன்று தான் ஜலந்தரன் அழிவான் என்ற நிலை இருந்தது. இதைத் தேவர்கள் மகா விஷ்ணுவிடம் தெரிவித்தனர். உடனே அவர் பிருந்தையின் கற்பைச் சோதிக்க ஒரு தவ முனிவர் வடிவில் பிருந்தை முன் சென்றார். அப்போது அவர் ஜலந்தரன் இரு கூறாகி இறந்து விட்டதை கூறி அவள் முன் அந்த இரு கூறுகளும் மாயையினால் வரும்படி செய்தார்.

பிருந்தை தன் கணவன் மீண்டும் உயிர் பெற்று வர வேண்டும் என மன்றாடிக் கேட்டுக் கொண்டாள். உடனே திருமால் ஜலந்தரனின் உடற் கூறுகளை ஒன்றாகச் சேர்த்து, தான் அந்த உடலில் புகுந்து ஜலந்தரனே மீண்டும் வந்து விட்டதாக நம்பும்படி செய்தார்.

பின்னர் திருமால் சிலகாலம் பிருந்தையுடன் குடும்பம் நடத்தினார். காலப்போக்கில் தன்னுடன் வாழ்பவர் தன் கணவன் இல்லை. மாயையில் வந்தவர் என்பதை அறிந்து கொண்ட பிருந்தை தீயில் புகுந்து உயிர் துறந்தார்.

இதனால் மிகவும் மனம் வருந்திய திருமால் பிருந்தை தீக்குளித்த இடத்திலேயே அமர்ந்து இருக்க, இதை பார்த்த பார்வதி தேவி தனது இடது கை சிறு விரலில் இருந்து ஒரு விதையை உண்டாக்கி சிவபெருமானிடம் கொடுக்க, அதை பிரம்மா பெற்று பிருந்தை இறந்த இடத்தில் ஊன்றி தண்ணீர் வார்த்தார். அங்கே துளசிச்செடி உண்டாயிற்று. திருமால் அந்தத் துளசியை எடுத்து தன்மேல் அணிந்து மீண்டும் சகஜ நிலையை அடைந்தார்.

இந்தச் சம்பவம் நடந்த இடம் திருவிற்குடி என்ற திருத்தலமாகும். துளசித்தாய் தோன்றிய திருவிற்குடி சிவதலம் நாகப்பட்டினத்தில் இருந்து திருவாரூருக்கு செல்லும் வழியில் உள்ளது.

ஜந்தரனை சம்ஹாரம் செய்த திருவிற்குடி சிவபெருமானின் அட்ட விராட்டான தலங்களுள் ஒன்றாகும். திருஞானசம்பந்தர் பாடல் பெற்ற இக்கோவில் பிருந்தையை திருமால் துளசியாக ஏற்றுக் கொண்ட தலம். இக்கோவிலில் இறைவன் பெயர் விரட்டானேசுவரர். இறைவியின் நாமம் ஏலவார் குழலி பரிமள நாயகி. தல மரம் துளசி. (தொடரும்)

# செய்தித்துளிகள்

## புகையிரதத்துடன் மோதி ஒருவர் உயிரிழப்பு

(திருமலை)

திருகோணமலையில் உள்ள தொழிற்சாலையில் இருந்து சீதுவ நோக்கி பயணித்த புகையிரதத்துடன் மோதி நபர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் சீனக்குடா - கொட்பே பகுதியைச் சேர்ந்த 43 வயதுடையவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் தற்பொழுது திருகோணமலை பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன் விசாரணைகளை சீனக்குடா பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (நி-5)

## குளவிக் கொட்டுக்கு இலக்காகிய 14 பாடசாலை மாணவர்கள்

(ஹற்றன்)

ஹற்றன் கல்வி வலயத்திற்குட்பட்ட நோர்வூட் எலிபடை தமிழ் வித்தியாலய மாணவர்கள் 14 பேர் நேற்று புதன்கிழமை காலை 7.30 மணியளவில் குளவிக்கொட்டுக்கு இலக்காகிய நிலையில் டிக்கோயா கிளங்கன் ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மாணவர்கள் பாடசாலைக்கு போகும் போது, அப் பகுதியில் இருந்த மரத்தில் காணப்பட்ட குளவிக்கூடே இவ்வாறு கலைந்து மாண வர்களை கொட்டியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். (நி-5)

## 3 கோடி ரூபாய் பெறுமதியுடைய கஜ முத்துக்களுடன் கைது

(கொழும்பு)

மூன்று கோடி ரூபாவுக்கு அதிகமான பெறுமதியுடைய 3 கஜ முத்துக்களை தம்வசம் வைத்திருந்த ஒருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய, இந்த விசேட சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. கதிர்காமம் திஸ்ஸ பிரதேசத்தைச் சேர்ந்த 45 வயதான ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். (நி-5)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 350 | 380 | 400 |
| உருளைக்கிழங்கு | 200 | 150 | 140 | 160 |
| பச்சைமிளகாய் | 700 | 700 | 750 | 800 |
| தக்காளி | 450 | 400 | 450 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 70 | 50 |
| கோவா | 360 | 350 | 450 | 450 |
| கரட் | 280 | 500 | 520 | 600 |
| பூசணி | 60 | 60 | 60 | 80 |
| புடோல் | 300 | 300 | -- | 300 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 180 | 180 | 200-250 | 240 |
| பெரிய வெங்காயம் | 200 | 160 | 150 | 200 |
| பாகற்காய் | 700 | 800 | 780 | 800 |
| வெண்டிக்காய் | 250 | 200 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 140 | 150 |
| பயற்றங்காய் | 450 | 400 | 400 | 400 |
| லீக்ஸ் | 340 | 360 | 450 | 400 |
| பீற்றூட் | 260 | -- | -- | 300 |
| கறிமிளகாய் | 400 | 700 | -- | 800 |
| முருங்கைக்காய் | -- | -- | -- | -- |
| போஞ்சி | 360 | 360 | 380 | 400 |
| கத்தரிதம்புள்ள | 300 | 300 | -- | 300 |
| கீரை - 1 பிடி | 130 | 120 | -- | 120 |
| தேசிக்காய் | 260 | 200 | 300 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 60-80 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 240 | 180 | 200 |
| வெங்காயப்பூ | 500 | -- | -- | -- |
| முள்ளங்கி | 180 | 160 | -- | 240 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 50 |
| வல்லாரை | 25 | 40 | 40 | 30 |
| ஈரப்பலா | 80 | 150 | -- | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரயிலுடன் டிப்பர் மோதி விபத்து

## மீரிகமவில் சம்பவம்

(கொழும்பு)

ரம்புக்கனையிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த புகையிரதத்துடன் மீரிகம பகுதியில் டிப்பர் மோதுண்டு விபத்து ஏற்பட்டது.

குறித்த டிப்பர் வாகனம் ரயில்வே தண்டவாளத்துக்கு இடையேயான குறுக்கு வீதியில் பயணித்தபோதே இந்த அனர்த்தம் நேற்று அதிகாலை 5.35 மணியளவில் ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக பிரதான ரயில் சேவையில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக இலங்கை ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.




இந்த விபத்தினால் டிப்பர் வாகனமும் ரயிலும் பலத்த சேதங்களுக்கு உள்ளாகியுள்ளன. அதேநேரம் டிப்பர் வாகனத்தின் சாரதி காயங்களுக்கு உள்ளாகியுள்ளதாக மீரிகம பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர். (நி-5)

# பதவி துறக்க தயாராகும் சமல்?

## அரசாங்கத்திற்குள் வலுக்கும் பனிப்போர்

(கொழும்பு)

சிங்கப்பூருக்கு தனிப்பட்ட விஜயமாக சென்றிருந்த கோட்டாபய ராஜபக்ஷ அவசரமாக நாடு திரும்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மருத்துவ பரிசோதனை ஒன்றுக்காக குறித்த பயணத்தை மேற்கொண்டிருந்த அவர் இன்று நாடு திரும்ப இருந்தார். எனினும் நேற்று அதிகாலை அவர் நாடு திரும்பியுள்ளதாக கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை, நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ நேற்று அதிகாலை தனிப்பட்ட விஜயமாக அமெரிக்கா சென்றுள்ளார்.

மறுபுறம் ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ. ஜயசுந்தர பதவி நீக்கம் செய்யப்படவேண்டுமென ஆளுங்கட்சிக்குள் கோரிக்கைகள் எழுந்துள்ளன.

அவர் பதவி நீக்கம் செய்யப்படாவிடின் தமது அமைச்சுப் பொறுப்பை துறக்கப்போவதாக அமைச்சர் சமல் ராஜபக்ஷவும் தனக்கு நெருக்கமான அமைச்சர்களிடம் கூறியிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்நிலையிலேயே கோட்டாபய அவசரமாக நாடு திரும்பியுள்ளார் என்றும் தென்னிலங்கைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி-5)

## உந்துருளி விபத்தில் தாயும், மகனும் பலி

(கொழும்பு)

சிலாபம் - கொழும்பு பிரதான வீதியின் இரட்டைக்குளம் பகுதியில் உந்துருளி ஒன்று வீதியை விட்டு விபத்துக்குள்ளானதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர்.

சம்பவத்தில் 53 வயதான தாயும் 23 வயதான அவரது மகனும் பலியானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-5)

# அச்சமின்றி பூஸ்டர் பெறுங்கள்

## கர்ப்பிணிகளுக்கு மருத்துவர் ஆலோசனை

(கொழும்பு)

ஒமிக்ரோன் பிறழ்வு உலகின் பல நாடுகளிலும் பரவியுள்ளது. எனவே மூன்றாம் கட்ட தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வது அத்தியாவசியமானதாகும்.

அதற்கமைய கர்ப்பிணிகள் எவ்வித அச்சமும் இன்றி மூன்றாம் கட்ட தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில், மூன்றாம் கட்ட தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டவர்களின் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கின்றமையால் வைரஸ் பரவக் கூடிய வாய்ப்பு குறைவாகும்.

காரணம் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிப்பதால் வைரஸ் உடலிலிருந்து வெளிப்படுவதும் குறைவடையும். கர்ப்பிணிகளுக்கும் ஏற்கனவே முதல் இரு கட்ட தடுப்பூசிகளையும் வழங்கியதைப் போன்றே மூன்றாம் கட்ட தடுப்பூசியும் வழங்கப்படும்.

அதில் எவ்வித மாற்றமும் இல்லை. கர்ப்பிணிகள் எவ்வித அச்சமும் இன்றி மூன்றாம் கட்ட தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள முடியும் என அவர் தெரிவித்தார். (நி-5)

# எரிபொருள் இறக்குமதியில் சிக்கல்

## கம்மன்பில சுட்டிக்காட்டு

(கொழும்பு)

எதிர்வரும் மாதங்களில் எரிபொருள் இறக்குமதியில் சிக்கல் நிலை ஏற்படும் என எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில சுட்டிக்காட்டியுள்ளார்.

எரிபொருளை வாங்குவதற்கு ஒரு மாதத்திற்கு சுமார்



420 மில்லியன் டொலர்கள் செலவாகும் நிலையில் எரிபொருள் இறக்குமதியில் சிக்கல் நிலை ஏற்படும் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அவர் தெரிவித்தார். (நி-5)

# இன்று ஒரு தகவல்

## ஒப்புக்கொள்வோம் உண்மையை

கொலைக்குற்றமாகட்டும் சாதாரணக் கண்ணாடி டம்ளர் ஒன்றைப் போட்டு உடைத்த விடயமாகட்டும் நடந்தவற்றை நாம் அப்பட்டமாக ஒப்புக்கொள்வோம்.

உங்களை எப்போதும் ஒரு ஜோடிக்கண்கள் கவனித்துக் கொண்டே இருக்கின்றன.

பக்தி சிரத்தை உள்ளவர்கள் அந்த ஒரு ஜோடிக் கண்களை இறைவனுக்கு உரியவனாக ஆக்கக்கூடும். மற்றவர்கள் தர்க்க ரீதியிலாவது இந்த உண்மையை ஏற்றுக் கொள்ளட்டும்.

நம் செயல்களின் விளைவுகளை நாம் சந்தித்தே ஆக வேண்டும். பலன்களை அனுபவித்தே ஆக வேண்டும். அப்படியிருக்கையில் நெருப்பென்னும் உண்மையை ஓலை கொண்டு பஞ்சு கொண்டு மூடி மறைக்கும் மூடச் செயலுக்கு முடிவு கட்டுவோம்.

நாம் செய்த தவறுகளை ஒப்புக்கொண்டால் அதை நாம் உணர்ந்து திருந்தியவர்களாகிறோம். மாறாக ஒப்புக்கொள்ளாத பட்சத்தில் மேலும் மேலும் தவறுகளைப் புரிந்து வேதனையில் சிக்கி உழல நேரிடுகிறது.

வலிய முன்வந்து ஒப்புக்கொள்வதன் மூலம் நம் பெருந்தன்மையும் நியாய உணர்வும் வெளிப்படுகின்றன. செய்யப்பட்ட தவறு இப்பெருமைகளின் முன் தவிடு பொடியாகிறது. ஆனால் மறைக்க மறைக்க மற்றவர்களால் அக் குற்றம் பெரிதாக்கப்படுகிறது. இதற்கு நாமே காரணமாக ஆகி விடக் கூடாது.

நடந்தவை எப்படியும் கண்டுபிடிக்கப்படும். ஆனால் தவறு செய்யப்பட்ட நிமிடத்திற்கும் கண்டுபிடிக்கப்படும் நிமிடத்திற்கு இடையில் உள்ள நேரம் இருக்கிறதே அது கொடுமை யான யுகம் போன்றது. இந்தத் துன்பம் போதாதென்று திட்டல்களோ கூடுதல் தண்டனைகளோ அத்துன்பத்திற்குத் துணையாகச் சேருகின்றன துன்பமோ துன்பம்!

தவறுகளை ஒப்புக்கொள்வதால் மற்றவர்களின் அடிமனதில் ஈரக்கசிவு ஏற்படுகிறது. அது தண்டனை என்னும் கொடிய நெருப்பை மெல்ல அணைக்கிறது. குறைந்த பட்சம் அதன் வீரியத்தையாவது கட்டுப்படுத்துகிறது.

தெரிந்தவற்றைத் தெரியாது என்று சொல்வதும் தெரியாதவற்றைத் தெரியும் என்று சொல்வதும் மேலும் மேலும் சிக்கலில் தான் கொண்டு போய் விடும் இவற்றைத் திட்டமிட்டுச் செய்தாலும் திண்டாட்டத்தில் தான் முடியும்.

எவ்வழி நல்வழியோ அவ்வழியே நம் வழியாகுமானால் அமைதியான வாழ்க்கையை வாழ்ந்து காட்ட முடியும்.

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## தாகம்

அதை நான் எப்படி அழைத்து வருவேன் என்ற தந்திரம் அதற்கு புரிந்துவிட்டால், நாளை என்னை எப்படி ஒழித்துக் கட்டுவது என்று அதற்கு புரிந்து போகும்.

ஆகவே, கொல்லப்படவேண்டியதுகொடிய இந்த முதலைதான்!" என்று அது எண்ணியது.

பின்னர் அது குரங்கைத் தேடிச்சென்றது. குரங்கிடம் அது முதலையின் திட்டத்தை எடுத்துக் கூறியது. எனவே, அதை ஒழித்துக் கட்ட வேண்டும் என்று கூறியது.

குரங்கும், நரியும் நீண்ட ஆலோசனை செய்தன. கடைசியாகக் குரங்கு கூறியது.

“இந்த முதலை நீரில் இருக்கும் வரை அதற்குப் பலம் அதிகம். அதை நீரை விட்டுச் சிறிது தூரம்வரை கூட்டி வந்து விடு. அப்போது அதைக் கொன்று விடலாம்!” என்று கூறிக் காதோடு காதாக இரகசியம் கூறியது.

நரி திரும்பிச் சென்றது. ஏரிக்கரை ஓரத்தில் இருந்த அதன் பதுங்கு குழிக்கு அருகே சென்றது. முதலையை அழைத்தது.

“நான் சாகப் போகிறேன். என்னை ஒரு வேட்டைக்காரன் சுட்டு விட்டான். தயவு செய்து நீரிலிருந்து வெளியே வந்து, என்னைக் காப்பாற்று!” என்று அழைத்தது.



முதலை நீரிலிருந்து எட்டிப் பார்த்தது. நரி கால்களை உதைத்துக் கொண்டு கிடந்தது. முதலையின் நாவில் எச்சில் ஊறியது.

“நண்பா, இதோ உன்னைக் காப்பாற்ற வருகிறேன்!” என்று கூறியவாறு விறுவிறுவெனத் தரையில் நடந்து வந்தது.

அது நரிக்கு அருகே வரவிருந்த சமயத்தில், தடதடவெனகுரங்கு ஓடிவரும் ஓசையைக் கேட்டது. குரங்கு அதன் அருகே வந்து ஒரு வைர மாலையைப் போட்டு விட்டு ஓடியது. முதலை ஆச்சரியத்துடன் வைர மாலையையும், குரங்கையும் பார்த்துக் கொண்டிருந்த அதே வேளையில், துரத்தி வந்த ஜமீன்தாரின் பணியாட்கள் முதலை அருகே மாலை கிடப்பதைப் பார்த்தனர்.

முதலையைத் தங்கள் கையில் உள்ள ஆயுதங்களினால் தாக்கிக் கொன்றனர் வைரமாலையைக் கைப்பற்றித் திரும்பினர். அதற்குள் நரி தன் வளைக்குள் புகுந்து கொண்டது. குரங்கு அடர்ந்த கிளைகளுக்குள் மறைந்து கொண்டது.

முதலை ஒழிந்த திருப்தியில் அன்றிலிருந்து இரு விலங்குகளும் நிம்மதியாக நீர்நிலையில் நீரைக் குடிக்கத் தொடங்கின. (முற்றும்)

# மகாபாரதம்




### கணவனை வயப்படுத்தும் வழி

கணவனை வயப்படுத்தும் வழி யாது?' என்று வினவிய சத்யபாமாவிற்கு திரௌபதி உரைத்தது. நீண்ட நாட்களுக்குப் பின் சத்யபாமாவும் திரௌபதியும் சந்தித்தனர்.

கண்ணனின் மனைவியான சத்யபாமா திரௌபதியை நோக்கி.. “புகழ்மிக்க பாண்டவர்களை நீ எவ்வாறு வயப்படுத்தினாய்? இதற்குக் காரணம் உனது விரதமா? தவமா? மந்திரமா? வயப்படுத்தும் மை ஏதேனும் வைத்துள்ளாயா? பாண்டவர் ஐவரும் உன்னைக் கண்டு மயங்கிக் கிடக்கிறார்களே, அதற்கு என்ன காரணம்? கண்ணபிரான் எப்போதும் என் வயப்பட்டு இருக்க வேண்டும். இவற்றையெல்லாம் எனக்கு சொல்” என்றாள்.

“சத்யா.. கெட்ட பெண்களின் நடத்தைப் பற்றி நான் ஏதும் கூற மாட்டேன். நல்ல மாதர்களின் ஒழுக்கத்தைப் பற்றி மட்டும் உரைக்கிறேன். மந்திரத்தாலோ, மாயையாலோ, மூலிகையாலோ தன்னை வயப்படுத்தும் மனைவியைக் காணும் கணவன் பாம்பைக் கண்டு அஞ்சுவது போல அஞ்சுவான்.

மனைவிக்கு பயப்படும் கணவனுக்கு மன அமைதி இல்லை. அமைதியில்லை என்றால் இன்பம் ஏது!” கெட்ட நடத்தையுள்ள பெண்கள் கணவனுக்கு தீங்கிழைக்கின்றனர். கணவனுக்கு விருப்பமில்லா எதையும் மனைவி செய்யக்கூடாது.

நான் என் கணவர்களிடம் நடந்து கொள்ளும் முறை பற்றிச் சொல்கிறேன். என்னிடம் சிறிதும் கர்வமில்லை. ஆசையும் இல்லை.

சினமும் இல்லை. பொறாமை என்பது கிஞ்சித்தும் இல்லை. என் மனதைக் கட்டுப்பாடுடன் வைத்துள்ளேன்.

தகாத சொற்களைச் சொல்வதில்லை. அதிகமாகவும் ஏதும் கூறுவதில்லை. கணவரின் மனம் அறிந்து நடக்கிறேன். சூரிய, சந்திரருக்கு இணையான என் கணவர்களை எண்ணிப் பெருமைப்படுகிறேன்.

கணவரைத் தவிர மற்றவரை அவர்கள் எவ்வளவு உயரிய நிலையில் இருந்தாலும் நினைத்துக்கூட பார்க்க மாட்டேன்.

கணவர் உணவின்றி இருந்தாலும் நானும் அவ்வாறே பட்டினி கிடப்பேன்.

வெளியேயிருந்து கணவர் வீடு திரும்பியதும் தக்கவாறு உபசரிப்பேன். தூய உணவை உரிய காலத்தில் அளிக்கிறேன். எப்போதும் வீட்டைச் சுத்தமாக வைத்திருக்கிறேன்.

சோம்பல் என்பது என்னிடம் துளியும் இல்லை.

கணவர் வெளிநாடு சென்றிருக்கும் போது நான் என்னை அழகுபடுத்திக் கொள்வதில்லை. நீராடேன். பூச்சூடேன். பூமி போன்ற பொறையுடைய என் மாமியாரை மிகுந்த மரியாதையுடன் கவனித்துக் கொள்கிறேன்.

என் கணவர் சத்தியம் தவறாதவர். நானும் அவ்வாறே உண்மையைக் கடைப்பிடிக்கிறேன். குடும்பத்தின் வரவு- செலவுகளையும் நானே கவனித்துக்கொள்கிறேன்.

பின் தூங்கி முன் எழுவேன். இப்படித்தான் என்கணவரை நான் வயப்படுத்தித்திருப்தி செய்கிறேன். இது போலவே நீயும் நடந்து கொள்வாயாயின் உன் கணவரான கண்ணன் உன்னை விட்டுப் பிரியவே மாட்டார்” என்றாள் பாஞ்சாலி.

சத்யபாமா திரௌபதியின் சொல் கேட்டு, வாழ்த்தி விடை பெற்றாள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னதைச் சொல்லுமாம் கிளிப்பிள்ளை.
-முதுமொழி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கட்சியின் கட்டளைப்படி வாக்களிப்பது முறையோ

கவிச்சக்கரவர்த்தி கம்பன் தந்த இராமாயணம் அழியா வரம்பெற்று இதிகாசமாக வாழ்ந்து கொண்டிருக்கிறது.

கம்பனின் படைப்பு; அதனைப் படிக்க வல்லவர்களை தன்பால் கவர்ந்தெடுக்கும் மாபெரும் ஈர்ப்பு சக்தி கொண்டது என்பது அறுதியிடப்பட்ட தீர்ப்பு.

இவ்வாறு கம்பனின் இராமாயணம் நின்று நிலைப்பதற்கு அந்தப் படைப்புக்குள் இருக்கக் கூடிய கதைப்புலமும் கவித்துவமும் மட்டுமே காரணமா? என்றால் இல்லை என்பதே அதற்கான பதிலாக இருக்கும்.

அப்படியானால், கம்பராமாயண இதிகாசம் சூரிய சந்திரர் உள்ளவரை நிலைபெறுமளவுக்கு மக்கள் மனங்களில் இரண்டறக் கலந்து விட்டதெனில், அதற்கு மூலகாரணம் கம்பனின் துணிச்சல் என்பதை இவ்விடத்தில் கூறித்தானாக வேண்டும்.

ஆம், சோழ மன்னனின் அறம் மீறிய செயலை தனியொரு மனிதனாக நின்று கண்டித்தவன் கம்பன்.

சோழ மன்னனை எதிர்த்தால், தன் எதிர்காலம் வீழ்ந்து போகுமே என்று இம்மியும் அவன் நினைத்தானில்லை.

மாறாக, மன்னன் என்றால் அவன் பிழை செய்ய முடியுமா என்ன?

மன்னன் என்பான் இந்த நாட்டை ஆள்பவனேயன்றி நாடு மக்களுக்குரியது.

ஆக, நாடாளும் மன்னன் எச்சந்தர்ப்பத்திலும் தர்மத்தின் வழியிலும் நீதியின் அடிப்படையிலுமே அரசாட்சி செய்ய வேண்டும்.

மன்னன் என்பதற்காக அவன் தான் நினைத்ததையெல்லாம் செய்யவும் முடியாது. செய்யவும் அனுமதிக்கக்கூடாது என்பதை இந்த உலகுக்கு அரசியல் தத்துவமாக – மக்களாட்சியின் அடிப்படைக் கோட்பாடாகத் தந்தவன் கம்பன்.

ஆம், மன்னவனும் நீயோ வளநாடும் உன்னதோ! என்று சோழ மன்னனைப் பார்த்து வீரத்தோடு கம்பன் கேட்டதனால்தான் அவன் படைத்த இராமாயணம் அறம் உரைக்கும் இதிகாசமாக இந்த மண்ணில் நிலைத்து நிற்கிறது.

ஆக, இதை நாம் கூறும்போது எம் சிந்தையெல்லாம் எங்கள் பிரதேச, பட்டின, நகர, மாநகர சபைகளை நோக்கிச் செல்கிறது.

அந்தோ! சரி எது? பிழை எது? என்று எதுவும் ஆராயாமல், நல்லது கெட்டதை சீர்தூக்கிப் பார்க்காமல் கட்சி இட்ட கட்டளைப்படி எதிர்த்து வாக்களிப்பது அல்லது ஆதரவளித்து கைஉயர்த்துவதைச் செய்கின்ற உறுப்பினர்களை என் சொல்வது.

அதோ! கம்பன், மன்னனை எதிர்க்கின்றான். தன் அரசவைக் கவிஞன் என்ற உயர் பதவியைப் பொருட்படுத்தாமல்.

ஆனால் இங்கோ உறுப்பினர் பதவிக்காக உண்மை, நீதி, நேர்மை என எல்லாவற்றையும் கைவிட்டு, அடுத்த தேர்தலில் ஆசனம் கிடைக்க வேண்டுமென்பதற்காக கட்சியின் கட்டளையை நிறைவேற்றுவதே தம் கடன் என்றிருப்போரை என் செய்வது.

ஆனாலும் இதற்குள்ளும் தற்துணிவோடு தமக்குச் சரியெனப்பட்டதைச் செய்கின்ற மனிதர்களும் இருக்கிறார்கள் என்பதையும் இங்கு கூறித்தானாக வேண்டும்.

# வடக்கின் 3 தீவுகளும் சீனாவுக்கு வழங்கும் நோக்கமில்லை

## பாதுகாப்பு செயலாளர் கமால் குணரத்ன

(கொழும்பு)

வடக்கின் மூன்று தீவுகளை சீனாவுக்கு கொடுக்கும் எந்தவித நோக்கமும் எமது அரசாங்கத்திடம் இல்லை.

ஆனால் முதலீடுகளின்போது சர்வதேச நாடுகளை தெரிவு செய்யும் வேளையில் தெரிவாவது சீன நிறுவனம் என்றால் அதனை எவரும் தவறான விதத்தில் விமர்சிக்கக்கூடாது என பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்தார்.

சர்வதேச நாடுகளுடன் முன்னெடுக்கும் உடன்படிக்கைகளினால் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் என்றால் அதனை நடைமுறைப்படுத்த ஜனாதிபதி அனுமதிக்க மாட்டார் எனவும் கூறினார்.

கடந்த ஈராண்டு காலத்தில் முப்படையினரின் செயற்பாடுகள் தொடர்பில் விளக்கமளிக்கும் விதமாக ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டபோதே பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமால் குணரத்ன இதனை கூறினார். (ம)

# மக்கள் நலனுக்காகவே பாதீட்டை ஆதரித்தோம்

## ஈ.பி.டி.பி தெரிவிப்பு

மக்கள் நலனை முன்னிறுத்தியதான எமது கட்சியின் கொள்கை நிலைப்பாட்டுக்கு அமைய மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் ஆட்சி ஒன்று மக்கள் மத்தியில் தொடர்ந்தும் செயற்பட வேண்டும் என்பதை முன்னிறுத்தியே இவ் வருடத்திற்கான யாழ். மாநகர சபையின் பாதீட்டுக்கு எமது கட்சி ஆதரவை வழங்கி வெற்றி பெறச் செய்துள்ளதாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாநகர சபை உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

தோற்கடிக்கப்படும் என பலரது ஆரூடங்கள் மற்றும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் முதல்வர் மணிவண்ணன் தரப்பினரது தலைமையிலான யாழ். மாநகர சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான பாதீடு நேற்றைய தினம் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் முழுமையான ஆதரவுடன் மேலதிக 3 வாக்குகளால் வெற்றி பெற்றிருந்தது.

இது குறித்து கருத்து தெரிவிக்கும் போதே, கட்சியின் உறுப்பினர்கள் இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர்.

மக்களின் நலன்சார் அபிவிருத்தியை அடிப்படையாக கொண்டது சபைகளின் அதிகாரம் மக்கள் பிரதிநிதிகளால் தான் செயற்படுத்த வேண்டும் என்பதற்கு இணங்க குறித்த சபைகளின் ஆட்சி அதிகாரங்களை பொறுப்பேற்க யார் முன்வருகின்றார்களோ அவர்களுக்கு பங்காளிகளாக அல்லாது ஆட்சி அமைப்பதற்கான பெரும்பான்மையை வழங்க முன் வந்திருக்கின்றோம் என்றார். (ம)

# முல்லையில் விபத்து; முதியவர் உயிரிழப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏ 9 வீதியில் இந்துபுரம் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். நேற்று முன்தினம் இரவு பத்து மணியளவில் வீதியில் துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்தபோது குறித்த விபத்து இடம் பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் திருமுறிகண்டி வசந்தநகர் பகுதியை சேர்ந்த 61 வயதுடைய சுப்பிரமணியம் முருகேசு (சந்திரன்) என்பவரே உயிரிழந்தவராவார். இது தொடர்பில் மாங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-281)

# டுபாய் சென்றார் பசில் மேலும் 60 எம்.பிக்கள் வெளிநாடு செல்ல திட்டம்

(கொழும்பு)

நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ தனது மனைவியுடன் டுபாய்க்கு பயணமாகியுள்ளார். தனிப்பட்ட விஜயத்தை அவர் மேற்கொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, சுமார் 60 அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் வருட இறுதி விடுமுறையை கழிப்பதற்கு வெளிநாடுகளுக்கு செல்ல தயாராகி வருகின்றனர் என பாராளுமன்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

வெளிநாடு செல்ல தயாராகும் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவில் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் உள்ளனர்.

அமெரிக்கா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் வாழும் மற்றும் படிக்கும் தமது பிள்ளைகளைப் பார்க்க, விடுமுறை நாட்களுக்கு அந்த நாடுகளுக்கு விஜயம் செய்ய எதிர்பார்த்துள்ளதாக பல பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். (ம)

# சத்திய தரிசனம்



## நம்பிக்கை நெஞ்சில் வை.

- உன் குற்றம் குறைகளை கண்டுபிடி. அடுத்தவரிடம் குணங்களைத் தேடு. அடுத்தவரிடமுள்ள குறைகளைத் தேடுவது பாவம். மிருக உணர்ச்சிகளை களைந்து விட்டால், தெய்வீக உணர்வுகள் பெருக்கெடுக்கும்.
- நீ வெளிச்சத்தில் இருக்கிறாய். ஒளி உன்னிடம் இருக்கிறது. நீயே ஒளியாகிறாய். உன் சொல், செயல், சிந்தனை, குணம், மனம் ஆகியவற்றை கவனி.
- நீ நம்பிக்கையை வளர்த்துக்கொள். அப்போதுதான் பிரச்னைகள் வெள் ளம் போல வந்து தாக்கும்போது, பாறைபோல எதிர்த்துநிற்க இயலும். வெளியுலக வாழ்வின் மாறும் சூழ்நிலைகளை அந்த நம்பிக்கை மறக்கவைக்கும். ராமதாசர் சிறையிலிடப்பட்டபோது, அந்த நன்மைக்காக ராமருக்கு நன்றி கூறினார். ஏனென்றால், சிறையின் பெருஞ்சுவர்கள் கனிவு கூர்ந்து, வெளி உலகத்தை முழுமையாக விலக்கிவைத்து, ராமநாம சிந்தனையில் இடையூறின்றி தொடர வைத்தமைக்காக நன்றி பாராட்டினார்.
- ஞானக்கதவுகள் திறக்கட்டும். அறியாமைத்திரை கிழிபடட்டும். தெய்வீக பேரானந்தம் வீட்டுக்குள் செல்லட்டும். நிலையான நிம்மதியில் நீ இருப்பாய்.
- முன்னதாக புறப்படு. மெதுவாக ஓட்டு. பாதுகாப்பாய் போய்ச்சேர். உன் வாழ்வை ரோஜாப்பூவாக்கிக்கொள். அது "நறுமணம்" என்ற மவுனமொழியில் பேசட்டும்.
- தன்னலமற்ற தொண்டு என்னை மகிழச் செய்கிறது. அனைத்து ஒழுக்கங்களுக்கும் அடிப்படை தூய்மையான மனம்தான்.
- [illegible] கண்ணை இமை காப்பதுபோல் அவன் உங்களை காப்பாற்றுவான். [illegible] நல்லதையே கேள் நல்லதையே காண் நன்றே செய் நலமே எண்ணு அப்போது தீயவை களையப்படும். இறையருள் உனக்கு இனிதே கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி I

34

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



உரு 30 லாவோஸ் எண்முறைமை



லாவோஸ் நாணயத்தாள்




### திபெத்திய எண் முறைமை

திபெத்து தொன்மையான சீன இந்திய பண்பாடுகளின் கருப்பகுதிகளுக்கு இடையே அமைந்துள்ளது. திபெத்திய பீடபூமிக்கு கிழக்கே தொடர்ந்த மலைத்தொடர்கள் சீனாவுடனான எல்லைகளை வரையறுக்கின்றன. இந்தியா மற்றும் நேபாளத்தின் உயர்ந்தெழும் இமய மலை திபெத்திற்கும் இந்தியாவிற்கும் இடையேயான தடையாக இருக்கிறது. திபெத் "உலகின் கூரை" அல்லது "பனித் தூவிகளின் நாடு" என்றும் அழைக்கப்படுகிறது.

மொழியியலாளர்கள் திபெத்திய மொழிகளையும் வழக்கு மொழிகளையும் திபெத்திய-பர்மிய மொழிகளைச் சேர்ந்தவையாக கருதுகின்றனர். அவை சீனவழி மொழிகளான சீன-திபெத்திய மொழிகள் குடும்பத்தின் அங்கங்களாக இல்லை.

சில தொல்லியல் தரவுகளின்படி, அரை மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர், இந்தியாவில் முதலில் குடியேற்றம் நிகழ்ந்தபோது பண்டைய மாந்தர்கள் திபெத்து வழியாக சென்றுள்ளனர். ஓமோ சப்பியன்சுகள் (homo sapiens, "அறிவுள்ள மனிதன்") முதலில் திபெத்திய பீடபூமியில் குறைந்தது இருபத்தியோராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழத் தொடங்கினர். இந்த மக்கள் தொகைக்கு மாற்றாக பெரும்பாலும் கி.மு. 3000 ஆண்டுகளில் வடச்சீன புதிய கற்கால குடியேறிகள் வந்தனர். இருப்பினும் "தற்கால திபெத்திய மக்கள் தொகையில் பழைய கற்கால மக்களின் மரபணுத் தொடர்ச்சி பகுதியும் உள்ளது".

பெருங்கற்கால நினைவுச் சின்னங்களை திபெத்திய மேட்டுநிலமெங்கும் காண முடிகிறது. இவை தொல்குடிகள் வழிபாட்டிற்கு பயன்படுத்தப்பட்டிருக்கலாம். வரலாறுக்கு முந்தைய இரும்புக்கால மலைக் கோட்டைகளும் இடுகாட்டு வளாகங்களும் அண்மையில் திபெத்திய மேட்டு நிலத்தில் கண்டறியப்பட்டுள்ளன. ஆனால் இக்களங்களின் மிகவும் அணுக்கமில்லாத மீயுயர் அமைவிடங்களால் தொல்லியல் ஆய்வுகள் நடத்துவது கடினமாக உள்ளது.

திபெத்தின் பல பகுதிகளை ஏழாம் நூற்றாண்டில், சாங்ட்சன் கேம்போ (Songtsän Gampo) எனும் அரசர் ஒருங்கு இணைத்தார். 1600 இன் தொடக்க காலத்தில் இருந்து தலாய்லாமாக்கள் என்று பொதுவாக அழைக்கப்படும் ஆன்மிக தலைவர்கள், திபெத்திய மைய நிர்வாகத்தின் தலைமையை (பெயரளவிலாவது) ஏற்றிருந்தார்கள். இவர்கள், அவலோகிதர் என்ற போதிசத்துவ தருமத்தின் வெளிப்பாடுகளை நம்புபவர்கள்.

1644 முதல் 1912 வரை சீனாவை ஆண்ட மஞ்சூரிய அரசு, 1571 இல், தலாய்லாமாவை திபெத்தின் அரசியல் மற்றும் ஆன்மிக தலைவராக ஏற்படுத்தியது. 17 ஆம் நூற்றாண்டிலிருந்து 1959 வரை, தலாய்லாமாவும் அவரது பிரதிநிதிகளும் வழிவழி தலைநகரான லாசாவை இருப்பிடமாகக் கொண்டு திபெத்தின் பெரும்பகுதியின் அரசியல் அதிகாரம் பெற்றவர்களாக, மதம் மற்றும் நிர்வாகப் பணி செய்து வந்தார்கள்.

19 ஆம் நூற்றாண்டில், விக்டோரியா மகாராணியின் பிரித்தானியாவுக்கும் ருசியாவின் சார் மன்னர்களுக்கும் இடையே, நடுவண் ஆசியாவில் நடந்த ஆதிக்கப் போட்டியில் ஒரு பிரித்தானிய படை இறுதியாக திபெத்தில் உள் புகுந்து, 1904 இல் லாசாவை கைப்பற்றியது.

இந்தப் படையெடுப்பு, பிரித்தானியாவுக்கும் திபெத்துக்கும் ஓர் அமைதி உடன்பாடு ஏற்பாட்டுக்கு வழி செய்தது. சில திபெத் வரலாற்றாளர்கள், இந்த தொலைதூர மலைநாடு ஒரு தனிநாடு என்பதற்கு இந்த உடன்பாட்டை ஆதாரமாகக் காண்பார்கள். இந்தப் படையெடுப்பால் சீனப் பேரரசு கொதித்தெழுந்தாலும் அதை நிறுத்த ஒன்றும் செய்ய இயலாமல், திபெத்தின் மேல் தனது கோரிக்கையை காக்கும் வண்ணம், பிரிட்டனுடன் ஓர் அரசுறவுப் (diplomatic) போராட்டம் நடத்தியது.

திபெத் 1911 இல் சீனாவிடம் இருந்து விடுதலை அறிவிப்பு செய்தது. ஆனால், எந்த ஒரு மேற்கத்திய நாடும் அதன் விடுதலைக்கு ஆதரவாக வரவோ அல்லது தூதரக உறவு வைத்துக்கொள்ளவோ ஒரு போதும் முன்வரவில்லை. சீன மக்கள் குடியரசு, வரலாற்று பதிவுகளை சுட்டிக்காட்டியும், திபெத்திய அரசுடன் 1951 இல், பதினேழு அம்ச உடன்பாட்டை கையொப்பம் பெற்றும் திபெத்தை சீனாவின் ஒரு பகுதியாக கோரிக் கொண்டது.

சீன மக்கள் குடியரசால் 1958 இல் திபெத்திய ஆன்மிகம் மற்றும் அரசியல் தலைவரான 14 ஆவது தலாய்லாமாவை விரட்டிவிட்டு, ஆக்கிரமிக்கப்பட்டது. இவ்வாறு ஆக்கிரமிக்கப்பட்ட பகுதி திபெத் தன்னாட்சி பகுதி (Tibet Autonomous Region) அல்லது சுருக்கமாக திபெத் என்று அழைக்கப்படுகிறது.

1965 இல் திபெத் ஒரு மாகாண அளவிலான தன்னாட்சிப் பகுதியாக அறிவிக்கப்பட்டது. இது சிசங் தன்னாட்சி பகுதி என்றும் அழைக்கப்படுகிறது. திபெத் தன்னாட்சிப் பகுதியின் நிர்வாகத் தலைநகரம் லாசா ஆகும். திபெத் தன்னாட்சிப் பகுதி 6 மாவட்டங்களாகவும் 68 கவுண்டிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. சீன மக்கள் குடியரசின் கட்டமைப்புள் திபெத், திபெத் தன்னாட்சி பகுதியின் அங்கமாகவே அங்கீகரிக்கப்படுகிறது. திபெத் தன்னாட்சிப் பகுதியுள் திபெத்திய பகுதிகளைத் தவிர யு-சாங் மற்றும் காம் மாகாணப் பகுதிகளும் அடங்கும். இத்தனாட்சிப் பகுதியே சீனாவின் மாகாணங்களுள் இரண்டாவது பெரிய நிலப் பரப்பைக் கொண்டுள்ளது (1,200, 000 சதுர கிலோமீற்றர்). இதன் தென் பகுதியும் மேற்கு பகுதியும் மியன்மார், இந்தியா, பூட்டான், நேபாளம் ஆகிய நாடுகளை ஒட்டியமைந்துள்ளது. எல்லை கோட்டின் மொத்த நீளம் சுமார் 4000 கிலோமீற்றராகும்.


திபெத்திய எண்கள் என்பது திபெத்திய எழுத்துக்களின் எண் அமைப்பு மற்றும் பலவிதமான இந்து-அரபு எண் முறை ஆகும். இது திபெத்திய மொழியில் பயன்படுத்தப்படுகிறது. மங்கோலிய எண்களும் திபெத்திய எண்களிலிருந்து உருவாக்கப்பட்டன. திபெத்திய எண்கள் உரு 31 இல் காட்டப்பட்டுள்ளன.

### பூட்டானின் எண் முறைமை

திபெத்திய எண்களே பூட்டானின் எண்களுமாகும். அதாவது பூட்டானின் தற்போதை எண் முறைமை திபெத்தின் எண்முறைமையாகும். பூட்டானில் 20 அடியாகக் கொண்ட ஒரு எண் முறையும் உள்ளது. பூட்டானின் தேசிய மொழியான சோங்கா (Dzongkha) திபெத்தியத்திலிருந்து உருவானது.

சீன-திபெத்திய மொழி சீன மொழி உட்பட 400 இற்கும் மேற்பட்ட மொழிகளைக் கொண்டுள்ளது. பூட்டானின் 17 ஆம் நூற்றாண்டின் தந்தை ரின்போச்சே ஜாப்ட்ரங், ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள மடங்களை (monasteries) இணைத்து, ஒரு மொழியின் கீழ் நாட்டை ஒருங்கிணைத்த பிறகு எண்கள் தரப்படுத்தப்பட்டன. பூட்டானின் முதன்மையான மொழி சோங்க்கா ஆகும், மேலும் 30 பிற தாய்மொழிகள் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன. அந்த காரணத்திற்காக, 1960 களில் கிங் ஜிக்மே டோர்ஜி வாங்சக் ஆங்கிலக் கல்வியை பள்ளி கல்விக்கான மொழியாக்கினார்.

உரு 31
திபெத்திய எண்முறைமை



(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16 பேர்...

பலியாகியுள்ளனர்.

இதற்கமைய நாட்டில் பதிவான கோவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 14,677ஆக அதிகரித்துள்ளது. (ம)

## பெண் ஒருவர்...



யுள்ளார்.

நேற்றுக் காலை 11.30 மணியளவில் இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா - நெடுங்கேணி - சேனைப் பிலவு பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த பெண்ணை வழிமறித்த ஒருவர் அவர் மீது நாட்டுத் துப்பாக்கியால் சுட்டுள்ளார்.

இதில் படுகாயமடைந்த பெண் சம்பவ இடத்திலேயே மரணமடைந்தார்.

குறித்த பெண் விவசாய காணியிலிருந்து உணவருந்துவதற்காக வீடு நோக்கி சென்று கொண்டிருந்தபோது வீட்டுக்கு அண்மித்த பகுதியில் வைத்து குறித்த சம்பவம் இடம்பெற்றது.

சம்பவத்தில் 34 வயதுடைய பாலசுந்தரம் சத்தியகலா என்ற பெண்ணே மரணமடைந்துள்ளார்.

அதே பிரதேசத்தை சேர்ந்த இளைஞர் ஒருவரே குறித்த பெண்ணை சுட்டதாக பிரதேசவாசிகள் சந்தேகம் தெரிவிப்பதுடன், தாக்குதலை மேற்கொண்ட இளைஞனை, அந்தப்பகுதியில் அவதானித்ததாக குறித்த பெண்ணின் தாயார் தெரிவித்தார். (ம-100,250,299)

## எரிவாயு அடுப்பு...

பிரதேச செயலகத்தில் பணிபுரியும் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவரது இல்லத்தில் நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் எரிவாயு அடுப்பு வெடித்துச் சிதறியுள்ளது.

5.45 மணியளவில் வெடிக்க ஆரம்பித்த அடுப்பு 7.30 வரையும் வெடித்துக் கொண்டிருந்ததாகவும் அதன்பின்னர் தீயணைப்பு பிரிவினர் சம்பவ இடத்திற்கு வந்து வெடிப்பினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்ததாகவும் வீட்டில் உள்ளவர்கள் தெரிவித்தனர். (ம-104)

## யாழ்.மாநகர...

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வசமுள்ள யாழ்ப்பாணம் மாநகர சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் நேற்றைய தினம் மாநகர முதல்வர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணனால் சபையில் சமர்ப்பிக்கப் பட்டது.

இந்த நிலையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 10 உறுப்பினர் களும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் 10 உறுப்பினர்களும் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் 2 உறுப்பினர்களும் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலா ஒரு உறுப்பினர் என 24 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்துள்ள அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 16 உறுப்பினர்களும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 3 உறுப்பினர்களும் ஐக்கிய தேசியக் கட்சியின் 2 உறுப்பினர்கள் என 21 உறுப்பினர்கள் எதிராக வாக்களித்துள்ளனர்.

இதனால் யாழ்.மாநகர சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் 3 மேலதிக வாக்கினால் நிறைவேற்றப்பட்டுள்ளது. (ம-18,33,104)

## தமிழ் சமூகத்...

இலங்கைக்கான சீனத் தூதுக்குழு நேற்று யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவுக்கு விஜயம் மேற்கொண்டது.

குறித்த விஜயம் தொடர்பில் இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென் ஹொங் தெரிவிக்கையில்,

சீனாவும் இந்தியாவும் சிறந்த நண்பர்கள். சிறந்த பங்காளர்கள். சிறந்த அயலவர்கள். சீனாவும் இந்தியாவும் இலங்கையுடன் நட்பை பேண முடியும் என நான் நினைக்கிறேன். இரு தரப்பினாலும் தமிழ் சமூகத்திற்கு அனுகூலங்கள் கிட்ட முடியும் என கீ சென் ஹொங் தெரிவித்தார்.

இந்த பயணத்தை நீண்ட நாட்களுக்கு முன்னர் திட்டமிட்டிருந்தாலும் கோவிட் தொற்றுக் காரணமாக அது சாத்தியமாகவில்லை.

இலங்கையுடனான உறவை மேம்படுத்தும்நோக்கில், இலங்கையின் ஏனைய இடங்களுக்கும் எதிர்காலத்தில் செல்லவுள்ளதாக அவர் கூறினார். (ம-18,33)

## யாழுடன் நல்லுற...

யாழ்ப்பாணம் பொது நூலகத்திற்கு நேற்றுப் புதன்கிழமை விஜயம் செய்த அவர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முதன்முதலாக யாழ்ப்பாணத்திற்கு விஜயத்தினை மேற்கொண்டுள்ளேன். நீண்டகால வரலாற்றினைக் கொண்ட யாழ்ப்பாணம் பொது நூலகத்திற்கு விஜயத்தினை மேற்கொண்டமையையிட்டு நான் மகிழ்வடைகிறேன்.

யாழ்ப்பாணம் பொது நூலகத்தின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் யாழ்.மாநகர முதல்வர் மற்றும் மாநகர சபை ஆணையாளர் ஆகியோரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டேன். அவர்கள் நூலகம் பற்றிய முழு விபரங்களையும் எமக்கு விளங்கப்படுத்தியிருந்தனர்.

எதிர்வரும் காலங்களில் யாழ்ப்பாணத்திற்கும் சீனாவிற்கும் இடையில் தொடர்புகளைப் பேண விரும்புகின்றோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-18)

## 'இந்தியன் சென்...

அதன்போது, அங்கு மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணனை சந்தித்து கலந்துரையாடியும் இருந்தார். அத்துடன் நூலகத்திற்கு உதவிகளையும் வழங்கியுள்ளார்.

அதேவேளை யாழ்.பொது நூலகத்தினுள் உள்ள "இந்தியன் சென்ரர்" பகுதியையும் சீன தூதுவர் பார்வையிட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-18,33)

## வவுனிக்குளத்தில்...

நடவடிக்கையில் ஈடுபட்ட இளைஞன் ஒருவன் நீரில் மூழ்கி உயிரிழந்த சம்பவம் ஒன்று நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

அம்பாள்புரம் வவுனிக்குளத்தினை சேர்ந்த விஜயரட்ணம் நிலவன் (வயது - 24) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

சம்பவம் தொடர்பில் மல்லாவி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். (ம-281)

## மேலும்...

முன்னதாக இவ்வாறு அடையாளம் தெரியாத சடலங்கள் தொடர் ந்து கரையொ துங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-18,33,60,104)

## யாழ்...

16 உறுப்பினர்களை கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சேர்ந்த மாநகர சபை உறுப்பினர்களின் கூட்டம் நேற்று முன்தினம் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் வரவு - செலவு திட்டத்தை ஆதரிப்பதில்லை என்ற முடிவை உறுப்பினர்கள் ஏகமனதாக முடிவு எடுத்திருப்பதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்திருந்தன. (ம-18,33)

## நயினா...

3ஆம் வட்டாரப் பகுதியில், நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு நீரில் மூழ்கி உயிரிழந்தவர், 2ஆம் வட்டாரம் பகுதியைச் சேர்ந்த நடராஜா தர்மபாலன் (வயது-59) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் சென்றுவிட்டு வருவதாக சென்றவர், கடந்த 9 நாட்களாக காணாமல்போயிருந்த நிலையிலேயே, நேற்று சடலமாக மீட்கப்பட்டதாக, பொலிஸார் தெரிவித்தனர். (ம-104)

## 'ஒமிக்ரோன்'...

ஒமிக்ரோன் மாறுபாட்டின் தொற்றுக்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

எனினும் இந்த தொற்றினால் பாதிக்கப்பட்டு கண்டறியப்படாத பலர் சமூகங்களில் இருக்கலாம் என்று உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ் சந்தேகம் வெளியிட்டுள்ளார்

எனவே, அதிக எண்ணிக்கையிலான தொற்றுக்கள், ஆயத்தமில்லாத சுகாதார அமைப்புகளை மீண்டும் பாதிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம)

தன நிதானய
திகதி - 2021.12.15
சீட்டிழுப்பு இலக்கம் - 647
Z 27 31 46 79
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 15.12.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2912
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
R 33 57 74 79
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2021/12/15
சீட்டிழுப்பு இலக்கம் 4617
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
V 8 7 7 3 9 8
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 15/12/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0965
W 20 16 33 77 79

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 15/12/2021
சீட்டிழுப்பு இலக்கம் 1182
வெற்றி இலக்கங்கள்
ரிஷபம் 7 9 5 0 3 9
தேசிய லொத்தர் சபை

அத கோடிபதி ADA KOTIPATHI
கிழமை: புதன்கிழமை
சீட்டிழுப்பு இல: 1420
வர்ணம்: இளஞ் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 15.12.2021
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,127,540
வெற்றி இலக்கங்கள் 08 28 48 50
ஆங்கில எழுத்து Y
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
கிழமை: புதன்கிழமை
சீட்டிழுப்பு இல: 0755
வர்ணம்: ஊதா
சீட்டிழுப்பு திகதி: 15.12.2021
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,399,180
வெற்றி இலக்கங்கள் 19 33 40 59 W
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
Draw Number சீட்டிழுப்பு வாரம் 1594
Colour நிறம் செம்மஞ்சள்
Full Draw Date சீட்டிழுப்பு திகதி 2021/12/15
Week Days Name தினம் புதன்
வெற்றி பெறும் இலக்கங்கள்
C 20 49 65 75
Next Jackpot அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூபா 74,925,150/-
அபிவிருத்தி லொத்தர் சபை

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 110
சீட்டிழுப்பு திகதி 15.12.2021
புதன்கிழமை
வெற்றி இலக்கங்கள் 32 | 43 | 44
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,564,660/-
அபிவிருத்தி லொத்தர் சபை

ராசி
சுப்பர் ஜக்பொட் பரிசு வெல்லப்பட்டுள்ளது ரூ. 3,761,510/-
Draw Date திகதி 2021 / 12 / 15
Draw Number வெற்றி வாரம் 3306
Colour வர்ணம் பச்சை
வெற்றி இலக்கங்கள் 09 31 51 59
மேஷம்
Total Value of Prizes வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 13,389,650/-

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1794
சீட்டிழுப்பு திகதி 2021 / 12 / 15
வெற்றி இலக்கங்கள் 02 24 52 61
ஆங்கில எழுத்து N
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 28,990,456/- Next Jackpot
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (9095)

**076 825 7716** (ஆகாஸ்)

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் சுன்னாகம் கந்தரோடைப் பகுதியில் கணக்கர் வளவு 4 பரப்பு காணி விற்பனைக்குண்டு.**
**(நிலப்பரப்பு)**
2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடிப் பாதையுடன் சுன்னாகம் பஸ் நிலையத்தில் இருந்து 800 மீற்றர் தூரம்
**பார்வையிடும் நேரம்**
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை (தரகர் தேவையில்லை) விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (9088)

தொடர்புகளுக்கு
**077 814 7389, 070 705 1655**

## வேலை வாய்ப்பு

மல்லாவி, மாங்குளம், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் கட்டட நிர்மாண வேலை செய்வதற்கு மேசன், கூலியாட்கள் உடன் தேவை. தங்குமிட வசதி உண்டு. நாள்/ கிழமை அடிப்படையில் சம்பளம் வழங்கப்படும். (9090)

**077 712 0945**
**076 316 5738**

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603, 021 567 1532**

## விரைவு பொதிகள் சேவை

DHL வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் சேவை 3 - 5 நாட்களுக்குள் வழங்கப்படுகின்றன.

**Lanka Cargo Worldwide Express**

இல. 315, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (9057)

**021 221 1995**
**076 283 2397**

## காணி விற்பனைக்கு

பிரம்படி லேன் 2 ஆம் ஒழுங்கையில் 2 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
(வெட்டுக் கிணறு) (9091)

**076 702 3565**

## கண்ணீர் அஞ்சலி



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட எங்கள் அன்புக்குரிய ஐயப்ப பக்தர்
**அமரர்**
**தெய்வேந்திரம் பஞ்சாட்சரம்**
SIO International (CEO)
**உரிமையாளர்**
அவர்களின் மறைவுக்கு
எமது ஆத்மார்த்தமான அஞ்சலிகள்!!!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!! (C-3267)

தோற்றம் : 14.11.1963
மறைவு : 14.12.2021

தங்க முகுந்தன் - குருஸ்வாமி சபரி ஸ்ரீ ஐயப்பன் யாத்திரைக் குழு, மூளாய், சுழிபுரம். 077 727 9238

## சிங்கள பேச்சு வகுப்பு

**Sinhala Spoken Class**

6 மாத காலத்திற்குள் சிங்களத்தில் சரளமாக பேசலாம். தரம் 6,7,8,9 மாணவர்களுக்கான சிங்கள பாட நெறிகளும் மேற்கொள்ளப்படும். (9086)

பழைய பொலிஸ் நிலையம், மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை. **076 105 6343**

## 2022 ஆம் ஆண்டுக்கான

**Desk Diary - 140/=**

பேப்பர் கவுஸ்
இல.300, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (C-3261)

## உடனடி வேலை வாய்ப்பு

**நிர்வாக உத்தியோகத்தர்**

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் (C-3237)

**V2 TRAVELS**

எமது கிளைகள்
கிளிநொச்சி, சுன்னாகம், சாவகச்சேரி, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, திருகோணமலை, வல்வெட்டித்துறை, கோப்பாய், புத்தூர்

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
**சம்பளம் - 15'000/-**
பயிற்சியின்போது - 10'000/-

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
**0777-068-777**
v2vacancies@gmail.com

## விரைவு பொதிகள் சேவை

**V2 TRAVELS**

**UK-975/=Kg**

எமது நேரடிக்கிளைகள்
- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-3215)

**0768226240** DHL

## யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்...

திருமண பட்டுப் புடைவைகளின் பூங்காவனம்

## இந்தியன் செலக்ஷனின்

**நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை**

அரச சட்டதிட்டங்களுக்கு அமைவாகவும் சுகாதார வழி முறைகளுக்கு அமைவாகவும் இந்தியன் செலக்ஷனின் நத்தார் மற்றும் புதுவருட மலிவு விற்பனை நடைபெறும் என்பதனை மகிழ்ச்சியோடு வாடிக்கையாளர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றோம்.

பட்டுச் சாறிகள், கொட்டுன் சாறிகள், சல்வார்கள், சல்வார் துணிகள், டொப் வகைகள், சிறுவர், சிறுமியருக்கான ஆடைத் தெரிவுகள் மற்றும் ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைத் தெரிவுகள்.

(C-3265)




விசேட விலைக் கழிவுகள்

ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்.

**இடம் : யாழ். வீரசிங்கம் மண்டபம்**
**காலம் : 16.12.2021 - 31.12.2021 வரை**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஊரெழு பிள்ளையார் கோவில் வடக்கு வீதியில் 11/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
(Lanka Farm அருகாமையில்)
1 பரப்பின் விலை 12 இலட்சம் (9093)

**077 658 5999**
**077 623 4204**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், மயிலிட்டி B.C றோட் சாந்த சந்தி அருகாமையில் மெயின் றோட்டுடன் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (9094)

**076 890 9259**
**077 015 0353**

## கண்ணீர் அஞ்சலி



கடந்த 14.12.2021 அன்று கொழும்பில் காலமான நயினை அம்மன் தேவஸ்தானத்தின் பரம்பரை அறங்காவலரும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தமிழ்ச் சேவை அறிவிப்பாளரும் சப்பிரகமுவ பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ்த்துறை பேராசிரியரும் பிரபல இந்து சமய சொற்பொழிவாளரும் நேர்முக வர்ணனையாளருமான
**வாகீச கலாநிதி**
**உயர்திரு கனகசபாபதி நாகேஸ்வரன்**
அவர்கட்கு எமது கண்ணீர் பூக்களை காணிக்கையாக அவர்தம் பாதங்களில் சமர்ப்பிக்கின்றோம். (9089)

இல. 20, பிரப்பங்குளம் வீதி, யாழ்ப்பாணம்.
செல்லையா நாகரத்தினம் குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.12.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.